Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-888)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 04 (06.06.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 245



யு.என்.எச்.சி.ஆர். உதவி ஆணையரை வரவேற்கிறார் தமிழ்ச்செல்வன்.

# யு.என்.எச்.சி.ஆர் உதவி ஆணையர் தமிழ்ச்செல்வனுடன் நேற்று சந்திப்பு!

(கிளிநொச்சி)

வடபகுதியில் - அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் செயற்திட்டங்களுக்கு, தொடர்ந்து ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும்படி விடுதலைப் புலிகளிடம் மேற்படி ஸ்தாபனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவி ஆணையாளர் தலைமையிலான குழு ஒன்று, நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து உரையாடியது.

இச்சந்திப்பின்போதே, விடுதலைப் புலிகளிடம் மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தமது செயற்திட்டங்கள் வழமைபோல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும், இதற்காகவே செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அதிகாரிகள், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தனர்.

அதேவேளை - ரோக்கியோ (10 ஆம் பக்கம் பார்க்க)

## ரோக்கியோவுக்கு பிரதமர் ரணில் குழு நேற்று புறப்பட்டது

(கொழும்பு)

ரோக்கியோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக, பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கக் குழு ஜப்பானுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

இக்குழுவில் - பிரதமருடன் அமைச்சர்களான ஜி.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட, நூர்தீன் மசூர், ஹக்கீம் ஆகியோரும் ஜப்பானுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.


## புலிகள் செல்லாததால் பங்கேற்பதாக இந்தியா அறிவிப்பு!

ரோக்கியோவில், எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவிருக்கும், இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் - இந்தியா பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாநாட்டில் - விடுதலைப் புலிகள், தாம் பங்குபற்றப் போவதில்லை என அறிவித்ததைத் தொடர்ந்தே, இந்தியா இந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# இடைக்கால நிர்வாகம் அமைப்பு; இருதரப்பு இடைவெளி பெரிதல்ல!

## ரோக்கியோ புறப்பட முன் ரணில் அறிவிப்பு



(கொழும்பு)

**சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருக்கின்றனர் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவது குறித்து இருதரப்புக்களுக்கும் இடையில் அதிகம் இடைவெளியிருப்பதாக நான் கருதவில்லை. தமக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று புலிகள் கேட்கின்றனர். நாம் அதற்கு இணங்கியுள்ளோம். இன்னமும் சிறிது காலத்திற்குப் பின், இருதரப்புக்கும் இடையில் நேரடிச் சந்திப்புக்கள் நடக்குமென்று எதிர்பார்க்கின்றேன். -இவ்வாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டுக்குப் புறப்படு முன்னர் தெரிவித்தார்.**

வெளிநாட்டு செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறும்போது -

தற்போது ஒரு சில கருத்து முரண்பாடுகளினால், தற்காலிகமாகத் தடைப்பட்டுள்ள இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் - மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜப்பானில் நடைபெறவுள்ள மாநாட்டின்போது (10 ஆம் பக்கம் பார்க்க)

## 3,000 கண்ணிவெடிகள் இயக்கச்சியில் இன்று மாலை அழிப்பு

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்ட 3,000 கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் - இன்று மாலை 4 மணிக்கு இயக்கச்சிப் பகுதியில் வைத்து அழிக்கப்படவுள்ளன. இதற்கு முன்னரும் இவ்வாறு மீட்கப்பட்ட வெடிபொருட்கள் ஒன்று சேர்த்து அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## போராளிகள் இருவர் தம்பலகாமத்தில் பொலிஸாரால் கைது!

தம்பலகாமம் - பாலம்போட்டாறு பகுதியில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுததாரிகளாகப் பிரவேசித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இரண்டு போராளிகள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளான கோகுலன், சுவேந்திரன் ஆகிய இருவரும் நேற்றுத் திருகோணமலை மாவட்ட நீதிமன்றின் ஆஜர் செய்யப்பட்டபோது,

எதிர்வரும் 18 ஆம் திகதிவரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

### யாழ்.நகைக் கடையில் மர்மமரணம்

# நண்பர்களுடன் உறங்கிய நபர் காலையில் சடலமாக மீட்பு!

யாழ்.நகரில் மற்றுமொரு நகைக்கடையிலும், மர்மமான முறையில் மரணமானவரின் சடலமொன்று நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று நகர்ப்பகுதியெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கஸ்தூரியார் வீதியிலமைந்துள்ள நகைக் கடையொன்றில் பணிபுரியும் சட்டநாதர் கோவிலடியைச் சேர்ந்த பாலச்சந்திரன் ராகவன் (வயது 19) என்னும் இளைஞனே, நேற்று - தான் பணிபுரியும் நகைக்கடையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இவர், நேற்றுமுன்தினம் இரவு சாப்பிட்டுவிட்டு நள்ளிரவு 12 மணியளவில் கடையில் பணிபுரியும் வேறு இரு இளைஞர்களுடன் (10 ஆம் பக்கம்

# யாழ். குடாநாட்டுப் படைகளை குறைப்பதான செய்தி தவறானது!

## இராணுவத் தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டிலுள்ள படையினரின் தொகையைக் குறைக்கவிருப்பதாக, யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ மக்கள் தொடர்பு அதிகாரி கேணல் இரத்னாயக்க தெரிவித்ததாக வெளியான செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று, இராணுவத் தலைமையகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுக்கள் தொடருமாக இருந்தால், குடாநாட்டிலுள்ள 40 ஆயிரம் படையினை 10 ஆயிரமாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேணல் இரத்னாயக்க தெரிவித்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இதுகுறித்தே இராணுவத் தலைமையகம் மறுப்புத் தெரிவித்துள்ளது. இது குறித்து இராணுவப் பேச்சாளர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகத்திலிருந்து 32 அகதிகள் படகுகளில் நெடுந்தீவு வந்தனர்!

(நெடுந்தீவு)

தமிழக நலன்புரி நிலையங்களில் வசித்து வந்த இலங்கையைச் சேர்ந்த 32 அகதிகள், நேற்றுக் காலை நெடுந்தீவு வந்தடைந்தனர்.

இவர்கள் - தமிழகத்திலிருந்து சிறியளவிலான இந்திய மீன்பிடிப் படகுகளில் நெடுந்தீவு, பணங்காணிப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் வந்திறங்கினர்.

இவ்வாறு வந்திறங்கியோரின் பெயர் விபரம் வருமாறு -

க.யூட் குரு (வயது 35 - பேசாலை), மு.வடிவேல் (வயது 65 - வவுனியா), ஞா.கற்பகம் (வயது 57 - மருதங்கேணி), க.கவிதா (வயது 20 - வெற்றிலைக்கேணி), க.வேலாயுதம் (வயது 32 - சாவகச்சேரி), ஆ.லலிதா (வயது 33 - வவுனியா)

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று தமிழீழ மாணவர் எழுச்சிநாள்; உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் - இன்று வடபகுதியெங்கும் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப் படவிருக்கின்றது.

மாணவர் எழுச்சிப்பேரணிகள் மற்றும் எழுச்சிக் கூட்டங்கள், கலை நிகழ்வுகள் என்று பல்வேறு எழுச்சி நிகழ்வுகள் இன்று வடபகுதியெங்கும் நடைபெறவுள்ளன.

"நிலம் காக்கும் நிறைவான கல்விக்கு வித்திடுவோம்" என்ற தொனிப் பொருளில் இன்றைய எழுச்சி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இன்றைய மாணவர் எழுச்சிநாளை ஒட்டி, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு -

இலங்கை சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு தமிழ் மக்களின் உரிமைகள் - சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் திட்டமிட்டு மறுக்கப்பட்டும், பறிக்கப்பட்டும் வந்துள்ளது. தமிழ் இனத்தை அழிப்பதற்காக சிறி (10 ஆம் பக்கம் பார்க்க)

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி-913)

பன்னாட்டு வீரர்கள் பங்குபற்றிய

# ஏஷியன் கராட்டிப் போட்டியில் பருத்தித்துறை வீரருக்கு தங்கம்!

(வடமராட்சி கிழக்கு)

இந்தியா, இலங்கை, நேபாளம், பங்களாதேஷ், ஹொங்ஹொங், மலேசியா ஆகிய நாடுகளின் கராட்டி வீரர்கள் பங்குபற்றிய அஸ்ரஷா ஏஷியன் கராட்டிப் போட்டியில், பருத்தித்துறை ராஜாளி சோட்டோகான் கராட்டி அசோசியேசனுக்கு, ஒரு தங்கப்பதக்கமும் இரண்டு வெண்கலப் பதக்கங்களும் கிடைத்துள்ளன.

நாவலப்பிட்டி விளையாட்டு அரங்கில், இக்கராட்டிப் போட்டிகள் மூன்று நாட்களாக நடைபெற்றன. இப் போட்டிகளில், 80 கிலோவுக்கு மேற்பட்டோருக்கான போட்டியில், பருத்தித்துறை ராஜாளி சோட்டோகான் கராட்டி அசோசியேசனைச் சேர்ந்த - ஆர்.கணேசமூர்த்தி முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை தட்டிக் கொண்டார்.

60 - 65 கிலோவுக்கு இடைப்பட்டோருக்கான கராட்டிப் போட்டியில், பருத்தித்துறை ராஜாளி கராட்டி அசோசியேசனைச் சேர்ந்த ரீ.ஸ்ரீதரனும, 80 கிலோவுக்கு மேற்பட்டோருககான கராட்டிப் போட்டியில், கே.சந்திரகுமாரும், வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தப் போட்டியில் - தங்கப் பதங்கத்தைப் பெற்றுக் கொண்ட ஆர்.கணேசமூர்த்தி, இலங்கைக் கராட்டிச் சங்கத்தால் கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் 1982 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கராட்டிப் போட்டியில் பங்குபற்றி, சம்பியனாகி தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொணடவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தில்லையம்பதி சிவகாமி அம்பாள் மஹோற்சவம்

கோண்டாவில் ஸ்ரீ தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய வைகாசி மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. 13 ஆம் திகதி - தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

உற்சவ காலங்களில் இரவு 8 மணி தொடக்கம் 9 மணிவரை தெய்வீகப் பேருரை நடைபெறும்.

# யாழ். நீதிமன்றுக்குப் புதிய வளாகம்; இன்னும் 30 மில்லியன் ரூபா தேவை!

## உலக வங்கியிடமிருந்து பெறுவதற்கு தீர்மானம்

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் நீதிமன்றக் கட்டடத் தொகுதியை முழுமையாக நிர்மாணிப்பதற்கு, மேலும் முப்பது மில்லியன் ரூபா தேவை என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியமைப்பது தொடர்பாக, நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஏற்பாட்டில், கொழும்பில் கடந்த திங்கட்கிழமை விசேட கூட்டமொன்று நடைபெற்றுள்ளது. இதன்போதே, இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் - பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியமைச்சின் செயலாளர் திருமதி தாரணி விஜேதிலக, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி சி.வரதராஜா, யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் புதிதாக நீதிமன்றக் கட்டடத் தொகுதியை அமைக்கும்போது - மேன்முறையீட்டு நீதிமன்றத்தையும் சேர்த்து அமைக்கவேண்டும் என்றும், இவ்வாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அமைப்பதற்கு, கட்டடத் தொகுதியின் உத்தேச மதிப்பீட்டுத் தொகையிலும் பார்க்க மேலதிகமாக 30 மில்லியன் ரூபா நிதி தேவையென்றும், எனவே - இதற்கான அங்கீகாரத்தை உலக வங்கியிடம் பெறுவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. உலகவங்கியின் அங்கீகாரம் கிடைத்தவுடன் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டுவதெனவும் அங்கு முடிவு செய்யப்பட்டது.

மல்லாகத்திலுள்ள பழைய நீதிமன்ற வளாகத்தில், இராணுவத்தினர் படைமுகாம் அமைப்பது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்துறை மற்றும் மல்லாகம் ஆகிய பிரதேசங்களில், முன்பு இயங்கிய நீதிமன்ற வளாகங்களில் மாவட்ட நீதிமன்றமும், நீதிவான் நீதிமன்றமும் உலக வங்கியின் திட்டத்தின் கீழ் மீளக் கட்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் நடைபெற்று வருவதால் - மல்லாக நீதிமன்ற வளாகத்தில் இராணுவ முகாம் அமைக்கும் திட்டத்தை உடனடியாக நிறுத்தப் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக, நீதியமைச்சின் செயலாளர் திருமதி தாரணி விஜேதிலக அக்கூட்டத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவும் இக்கூட்டத்தில் வைத்து உறுதியளித்திருப்பதாகவும், யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்துள்ளார். (லி)

## சிறு விளம்பரம்


### பல் கட்டுதல்

பல் கட்டுதல், பல் கிளிப் போடுதல் நல்லமுறையில், நியாய விலையில் மேற்கொள்ளலாம். கண் பரிசோதிக்கப்பட்டு நவீன ரக பிறேம்களில் மூக்குக்கண்ணாடிகளைப் பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம், இல.05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி-1051)



## யாழ்ப்பாண மாநகரசபை

### உள்ளூராட்சி வாரம் - 05 மைல் ஓட்டப் போட்டி

உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வதிவோர் மாத்திரம் பங்குபற்றும் 05 மைல் ஓட்டப்போட்டியை, யாழ்.மாநகரசபை எதிர்வரும் 13.07.2003 ஆம் திகதி நடாத்தவுள்ளது.

இப்போட்டி தொடர்பான நிபந்தனைகள், விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களை உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டத்தினையொட்டி நல்லூர் மாநகரசபை வளவினுள் இயங்கும் விசேட அலுவலகத்தில் ரூபா 50/-ஐ செலுத்தி எதிர்வரும் 25.06.2003 ஆம் திகதி பி.ப 3.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(சி/1053)



நிறஞ்சனாஸ் சங்கானை

கீதா, ரமேஸ், விஜயன் நடித்த

(F) லைவ் ஸ்ரார்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 8.45 (பு.நே)
The Rock The scorpion king

(சி-974)



ராஜா யாழ்ப்பாணம்.

இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

புதிய கீதை

தினசரி 10.30, 2.30, மட்டும்
BEHIND ENEMY LINES (WAR FILM)
இரவு 7.00, 9.30, மட்டும்
6 முதல் 8வரை



(சி-973)



## குடும்ப/பொது உளவளத்துணையாளருக்கான பயிற்சி நெறி

மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பயிற்சிக் காலம் - ஒரு வருடம்.
   பயிற்சி நாட்கள் - சனி, ஞாயிறு மு.ப. 9.00 - பி.ப 2.00 மணி வரை
2. கல்வித்தகைமை - க.பொ.த. உயர்தரம் சித்தி, சமூகசேவை, உளவியல் நாட்டம்.
3. பயிற்சிக் கட்டணம் - 4000/-

சுய விபரமடங்கிய விண்ணப்பப் படிவத்தை 15-06-2003 முன்-

இயக்குனர்
"அகவொளி"
குடும்பவளத்துணை நிலையம்.
சென். பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரில் அல்லது அஞ்சலில் அனுப்பி வைக்கவும்.

இயக்குனர்
அருட்திரு S.J.இராஜநாயகம்

(367)


# 42 ஆவது பிறந்த நாள் நினைவலைகள்



## ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன்

குருஷேத்திர
மையத்திலிருந்து
தன்னின
மக்களின்
உரிமைக்காக
தனது பேனாவை
ஆயுதமாக்கி
குரல் தந்தவன்

இவன்
மரணிக்கவில்லை
நீங்காத
நினைவாக
நீக்கமற
நிறைந்துள்ளான் !

- குடும்பத்தினர்.
(கனடா)

மலர்வு 05.06.1961

உதிர்வு 19.10.2000

(சி-1054)

# தற்போதைய சமாதான முயற்சிகள் இறுதித் தீர்வைப் பெற்றுத் தரும்!

## கருத்துக் கணிப்பில் 86 வீதமான மக்கள் நம்பிக்கை!

(கொழும்பு)

இலங்கையில் 37 சதவீதமான மக்கள் சமஷ்டித்தீர்வு ஒன்று எட்டப்படுவதை விரும்புவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அண்மையில் நடத்திய கருத்துக் கணிப்பில் இருந்து தெரியவந்திருக்கின்றது.

இந்தக் கருத்துக் கணிப்பில் இருந்து மேலும் தெரிய வருவதாவது,

சமஷ்டி அமைப்புமுறை தொடர்பாகப் பொதுமக்களுக்குச் சரியான தகவல்கள் கிடைக்கவில்லை என்று 65.8 வீதமான மக்கள் கருத்து வெளியிட்டனர்.

தற்போதைய சமாதானப் பேச்சுக்களின் மூலம் இறுதியான அமைதித்தீர்வு கிடைக்கும் என்று 86 வீதமான மக்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.

சமாதானப் பேச்சுக்களின் மூலம் அமைதித்தீர்வு கிடைக்கும் என்று 98.5 வீதமான முஸ்லிம் மக்களும், 98 வீதமான மலையகத் தமிழ் மக்களும், 97.4 வீதமான தமிழ்மக்களும், 84.4 வீதமான சிங்களமக்களும் நம்பிக்கை கொண்டிருப்பது தெரியவந்துள்ளது.

கடந்த ஜனவரி - பெப்ரவரி மாதங்களைவிட - சமாதானப் பேச்சுச்சுக்களில் நம்பிக்கை வைத்திருப்போரின் தொகை 3 வீதத்தனால் அதிகரித்திருப்பதும் தெரியவந்திருக்கின்றது.

கருத்துக் கணிப்பில் பங்குகொண்ட மக்களில் 30 வீதமான மக்கள் இராணுவ - அரசியல் தலைமைகளில் தமது நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த இராணுவ - அரசியல் தலைமைகள் சமாதானப் பேச்சுக்களுக்குத் தடையாக இருப்பதாக இவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சமாதான முயற்சிகளில் தற்போதைய அர்ப்பணிப்புக் குறித்து 50 வீதமான மக்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர். சென்றமுறை 56 வீதமான மக்கள் அரசின் மீது நம்பிக்கை தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் மூன்றாவது தரப்பு சர்வதேச மத்தியஸ்தம் அவசியம் என்று 87 வீதமான தமிழ்மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இதேவேளை, 22 வீதமான சிங்கள மக்களே மூன்றாவது தரப்பு சர்வதேச மத்தியஸ்தத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். தேசியரீதியில் 29.8 வீதமானோர் மட்டுமே மூன்றாந்தரப்பு மத்தியஸ்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

### பதவியுயர்வுப் பரீட்சைக்கான விசேட வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

தட்டெழுத்தாளர் சேவையின் தரம் II வகுப்பு 'அ' பிரிவு பதவியுயர்வுப் பரீட்சைக்குரிய பாடத்திட்டத்திற்கமைவான பயிற்சி மற்றும் விசேட வகுப்புக்களை மிகக்குறுகிய காலத்தில் இலவசமாக நடாத்துவதற்கு- மத்திய, மாகாண அரச தட்டெழுத்தாளர் சங்கம் தீர்மானித்திருப்பதால், மேற்படி பரீட்சைக்குத் தோற்றவிருப்போர் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுள்ளது.

### வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

கற்கோவளம் மெதடிஸ்த மிஷன தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு உதயதாரகை விளையாட்டு மைதானத்தில், பாடசாலை அதிபர் ஆ.மகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

(116)

### வலிகாமம் வலயத்தில் நான்கு பாடசாலைகள் முதலிடம்

(பளை)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட நான்கு பாடசாலைகள் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளன.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே முதலாம் இடத்தைப் பெற்றவையாகும். இப்பாடசாலைகள் நான்கிற்கும் தலா 50 ஆயிரம் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளது.

(115)

### ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக கூட்டமும், விவசாயக்குழுக் கூட்டமும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் நடைபெறுமெனக் கரவெட்டி பதில் பிரதேச செயலர் ஆர்.சிவபுண்ணியம் அறிவிததுள்ளார்.

(17)

# சமாதானத்தை வலுப்படுத்த ஐரோப்பிய யூனியன் நிதியுதவி!

வட- கிழக்குப் பகுதிகளில் போர் நிறுத்தக் கண்காணிப்பு மற்றும் சமாதான நடவடிக்கைகளை வலுப்படுத்தும் செயற்திட்டங்களுக்காக ஐரோப்பிய யூனியன் 3.27 மில்லியன் யூரோக்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

சமாதானச் செயலகத்தின் நடவடிக்கைகளை வலுப்படுத்தல், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளை விஸ்தரித்தல் மற்றும் கண்காணிப்பாளர்களின் தொகையை அதிகரித்தல், முகமாலை, புளியங்குளம், ஓமந்தை போன்ற சோதனைச் சாவடிகளுக்கு மின்சார வசதிகள் வழங்குதல், இந்தச் சோதனைச் சாவடிகளூடாக 24 மணிநேரப் போக்குவரத்து நடைபெறுவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற செயற்திட்டங்களுக்கே, ஐரோப்பிய யூனியன் இந்த நிதியுதவியை வழங்கவுள்ளது.

இந்த உதவித்திட்டம் குறித்த ஒப்பந்தம் விரைவில் செய்து கொள்ளப்படும் என்று ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது.

### பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி

தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப. 2 மணிக்கு மாயக்கைப் பிள்ளையார் கோவிலடி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வீ.வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் - வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (116)

# வெள்ளப் பாதிப்பு புனரமைப்புக்கு 278 கோடி ரூபா தேவைப்படுகிறது

## வெளிநாட்டுத் தூதுவர்களிடம் அமைச்சர் கருஜெயசூரிய

தென்பகுதியில் அண்மையில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் சேதமுற்ற பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 278 கோடி ரூபா தேவைப்படுவதாக அனர்த்த முகாமைத்துவக் குழுவின் தலைவரும் அமைச்சருமான கருஜெயசூரிய தெரிவித்தார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் அண்மையில் தென்பகுதி மாவட்டங்களில் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிப்பதற்காக நேற்று முன்தினம் கொழும்பில் கூட்டம் ஒன்று



இடம்பெற்றது.

இந்த கூட்டத்திலேயே அமைச்சர் கருஜெயசூரிய மேற்படி தகவலை வெளியிட்டார். இந்தக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் பங்கேற்றார்.

பெருமளவு வெளிநாட்டுத் தூதுவர்களும், இராஜதந்திரிகளும் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் - அமைசசர் கரு ஜெயசூரிய மேலும் தகவல் வெளியிடுகையில்,

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு யுனிசெப் முன்வந்துள்ளது. பாடசாலை புனரமைப்புக்கான முழுமையான நிதியையும் யுனிசெப் நிறுவனமே வழங்க இணங்கியுள்ளது.

இதன்படி மூன்று லட்சம் ரூபாவுக்கு உட்பட்ட புனரமைப்பு வேலைகளைக் குறித்த பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களே பொறுப்பேற்றுச் செய்ய அனுமதிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மிகவும் விரைவாகப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகவே மூன்று இலட்சம் ரூபாவுக்குக் குறைந்த புனரமைப்பு வேலைகளைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களிடம் கையளிக்கப்படடுள்ளது.

மூன்று இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட புனரமைப்பு வேலைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து பிரதமர், ரணில் விக்கிரமசிங்க, கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு ஆகியோருடன் ஆராய்ந்த பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்தார்.

# நியாப் திட்டங்கள் குறித்து உலக வங்கிக் குழுக்கள் ஆய்வு!

(கொழும்பு)

உலக வங்கியின். அதிகாரிகளைக் கொண்ட இரண்டு குழுக்கள் வடக்கு - கிழக்குப் பகுதியில் விவசாய அபிவிருத்தி மற்றும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைத்தல் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உலக வங்கியின் உதவியுடன் நியாப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்தே இந்தக் குழுவினர் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.

உலக வங்கியின் இந்தக் குழுக்களில் ஒன்றுக்கு இந்தியாவைச் சேர்ந்த ஜெகநாதன் என்பவரும், இன்னொரு குழுவுக்கு ஜப்பானைச் சேர்ந்த ஓ மின்றும தலைமை வகிக்கின்றனர்.

இவர்களுடன் நியாப் திட்டப் பணிப்பாளர் மற்றும் அரசஅதிகாரிகள் ஆகியோர் நேற்று முன்தினம் திருகோணமலையிலுள்ள கிராமங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை அவதானித்தனர்.

இதன்போதே பல கிராமங்களில் மக்கள் - மருத்துவ, மின்சார மற்றும் அடிப்படை வசதிகள் இன்றி இருப்பதை இவர்கள் அவதானித்துள்ளனர்.

திருகோணமலையிலிருந்து இவர்கள் கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளிலுள்ள திட்டங்கள் குறித்து ஆய்வுசெய்யச் சென்றது குறிப்பிடத்தக்கது.



விவசாயக்குளம் ஒன்றைப் பார்வையிடும் உலகவங்கி அதிகாரிகள் குழு

# மக்களுக்கான கடமைகளை எம்.பிக்கள் நிறைவேற்றவில்லை

## ஜோசப் மைக்கல் பெரேரா கவலை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள்- மக்களுக்கு நிறைவேற்றப்படவேண்டிய கடமைகள் உரியமுறையில் நிறைவேற்றப்படவில்லை என்று சபாநாயகர் ஜோசெப் மைக்கல் பெரேரா நேற்று நாடாளுமன்ற அமர்வின்போது கவலை தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்குரிய அதிகாரங்களை உரிய முறையில் பயன்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்றவேண்டும் என்றும் சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

பொது வசதிகள் சபை சட்ட மூலம் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாக, சபைக்கு அறிவிக்கும்போதே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் - மக்களுக்கான சேவையை உரிய முறையில் வழங்கவில்லை என்பதைக் கவலையுடன் தெரிவிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 89 பாலங்கள் புனரமைக்க பரிட்டிஷ் வங்கி கடனுதவி!

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளிலுள்ள 89 பாலங்களைப் புனரமைப்புச் செயவதற்குப் பிரிட்டிஷ் வங்கி ஒன்று கடனுதவி வழங்கவுள்ளது.

3600 மில்லியன் ரூபா கடனுதவியைப் பெறும் இந்த ஒப்பந்தம் - நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் பிரிட்டிஷ் தூதரக முதலாவது செயலாளர் அன்ரனி மெட்லியும், திறைசேரிச் செயலாளர் சரித்த ரத்வத்தவும் கலந்துகொண்டனர்.

### வைத்தியசாலைக்கு நிதியுதவி

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபைக்கு ஐக்கிய இராச்சியத்திலிருந்து வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நலன் விரும்பி ஒருவர் 50 ஆயிரம் ரூபா நிதியுதவியை வழங்கவுள்ளார்.

இந்நிதியை இளைப்பாறிய வைத்திய அதிகாரி எஸ்.பூரணச்சந்திரன்- வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாளிடம் கையளித்தார்.




வதிரி பரமானந்த ஆச்சிரம கட்டடத் திறப்பு விழாவில் ஆச்சிரம அறங்காவலர் டொக்டர் பத்மநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணணலாம். (17)

# படையினரால் கைதாகி காணாமற்போனோர்; ஆறாம் கட்ட விசாரணை இம்மாத இறுதியில்!

## மனித உரிமை ஆணைக்குழு தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமற் போனோர் தொடர்பான ஆறாம் கட்ட விசாரணைகள் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளன.

இந்த விசாரணையில் காணாமற் போன ஐம்பது பேர் தொடர்பான வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் அமைக்கப்பட்ட ஐந்து பேர்கொண்ட குழுவினர், காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை 106 பேரின் வாக்குமூலங்கள் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், மிக குறைந்தளவானோரே விசாரணைக்குச் சமூகமளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டம் கட்டமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இந்த விசாரணைகள் எதிர்வரும் ஆவணி மாதம் முடிவுற்றதும், விசாரணைகளின்போது வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு - காணாமற்போனோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திரைப்படங்களால் சிறுவர்கள் புகைபிடிப்பினை நோக்கி ஈர்ப்பு!

## யுனிசெப் பிரதிநிதி தெரிவிப்பு

திரைப்படங்களில் புகைப்பிடிப்பதைக் கவர்ச்சிகரமாகச் சித்தரிப்பதன் மூலம் சிறுவர்கள் புகைபிடித்தலை நோக்கி ஈர்க்கப்படுகின்றனர். இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி - தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களும், தென்னிந்தியத் தொலைக்காட்சி நாடகங்களும் புகைப்பிடித்தலை மிக அதிகமாகப் பிரசாரப்படுத்துகின்றன என்று, யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதி டொக்டர் ஹரிஸ் சந்திர யக்காவல தெரிவித்தார்.

உலக புகைத்தல் தவிர்ப்பு தினத்தை முன்னிட்டு போதைவஸ்து தகவல் நிலையம் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 12 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி பிரபல இந்திய கதாநாயகர்கள் பலர், புகைபிடிக்கும் காட்சிகளில் நடித்துள்ளனர். இந்தக் கவர்ச்சி நடிகர்களின் நடிப்பினால் ஈர்க்கப்படும் சிறுவர்கள், புகைபிடித்தலைக் கைக்கொள்கின்றனர்.

கடந்த பத்து ஆண்டுகளில் - பதினைந்து வயதிற்குட்பட்ட ஏழு சிறுவர்களில் ஒருவர் சிகரெட் பாவனைக்கு அடிமையாவதுடன, மூன்றில ஒருவர் சிகரெட் பாவனையினால் ஏற்படும் நோய்த் தாக்கங்களினால் மரணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்களிடையே அதிகரித்துவரும் புகைப்பிடிக்கும் பழக்கத்தைத் தடுக்கும் சட்டங்கள் உடபட, இளைஞர்களின் சுகாதாரப் பிரச்சினைகள் அடங்கிய தேசியக் கொள்கை ஒன்றை யுனிசெப் நிறுவனம் சுகாதார அமைச்சுடன் இணைந்து, வகுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### ஆலய மஹோற்சம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

நாரந்தனை - சரவணை கர்ணந் தோட்டம் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 12 நாட்களுக்கு நடைபெறவுள்ள உற்சவகால நிகழ்வுகளின்போது- மாலை 7 மணிமுதல் 8 மணிவரை காரை.கு.சிவராஜசர்மாவின் சமயச் சொற்பொழிவும் நடைபெற்றுவருகிறது. (29)

### இந்தியாவுக்கு திடீர் விஜயம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர், இரா.சம்பந்தன் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

இவர் இந்தியா சென்றதால், நேற்று முன்தினம் மாலை நடைபெறவிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைக்குழு கூட்டம் ரத்துச்-செய்யப்பட்டது.

# ஆனைக்கோட்டையில் வைத்து மீன் விற்பனை செய்யத் தடை

## வருமானவரிப் பரிசோதகர் நடவடிக்கை

ஆனைக்கோட்டை - சோமசுந்தரம் வீதியில் காலை நேரத்தில் வீதியோரத்தில் வைத்து மீன்விற்பனை செய்வதற்கு, மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகப் பொறுப்பதிகாரி தடை விதித்துள்ளார்.

மானிப்பாய் பிரதேசசபை உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள பிரசாத் சந்தையில், மீன் மற்றும் மரக்கறிச் சந்தை நடைபெறுகிறது.

சோமசுந்தரம் வீதியில் மீன் விற்பனைக்காக கூடுவோர், பிரசாத் சந்தையில் வைத்து அவற்றை விற்பனை செய்யுமாறு உப அலுவலக வருமானவரிப் பரிசோதகர் கேட்டுள்ளார்.

இதேவேளை - ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில், ஒரு சில மீன் வியாபாரிகளே கூடுவதாகவும்- அதைச் சந்தையாகக் கணிக்கப்பட முடியாது எனவும் - அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க மானிப்பாய்- ஆனைக்கோட்டை பிரதான வீதியில் இயங்கிவரும் மாலைநேர மீன் சந்தை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி முள்ளி கரப்பிரான் பிள்ளையார் ஆலய வீதியில் இயங்கிவருவதால், பொதுமக்கள் அதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

இதனால் மாலை நேரத்தில் வாகன நெரிசல்கள் ஏற்பட்டு வீதி விபத்துக்களும் இடம்பெறுவதாகப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.(100)

# யுத்த நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வு காண இடைக்கால நிர்வாகம் உருவாகவேண்டும்!

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் அரசுக்கு வேண்கோள்

இருபத்தைந்து ஆண்டுகால யுத்த நெருக்கடிக்கு நிரந்தரத்தீர்வொன்றைக் காணும் முதற்படியாக, விடுதலைப் புலிகளின் கையில் இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட வேண்டும். சர்வதேச சமூகம் இதற்காக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். இவ்வாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

இராணுவ நெருக்கடிக்கு முடிவு கட்டி, நல்லெண்ண சமாதான சூழ்நிலையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்காகவே போர்நிறுத்தமும், புரிந்துணர்வு உடன்படிக்கையும் இருபகுதிகளினாலும் கைச்சாத்திடப்பட்டது. புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்குமிடையே போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு பதினான்கு மாதங்கள் பூர்த்தியாகிவிட்டன. அத்துடன், இந்தக் காலப்பகுதியில் ஆறு தடவைகள் இரு தரப்பினருக்கும் இடையே - வெளிநாடுகளில் பேச்சுவார்த்தைகளும் நடாத்தப்பட்டுள்ளன.

போர்நிறுத்த ஒப்பந்தத்திலும், பேச்சுவார்த்தைகளிலும் எத்தனையோ விடயங்கள் இணக்கம் காணப்பட்டு செயற்படுத்தப்படும் என ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தும், அது பேச்சளவில் மட்டும்தான் இருக்கிறது. மாறாக இவற்றைப் பூரணமாக அமுல்படுத்தி, சமாதான முயற்சிகளை வலுப்படுத்தி, மனச்சுத்தியுடன் நடந்துகொள்ள அரசு தவறிவிட்டது.

மக்களின் இயல்புவாழ்க்கை என்பதன் பதம் - இராணுவ முகாம்களை விலக்கி மக்களின் மீள்குடியேற்றத்துக்கு இடமளிப்பதென்பதாகும். இன்னமும் இது நடைபெறவில்லை.

குடாநாட்டின் முப்பது சதவீதமான நிலப்பகுதி - சமாதானக் காலத்திலும் இராணுவ ஆக்கிரமிப்பு வலயமாகவே காணப்படுகிறது. குடாநாட்டின் வளம்மிக்கதும் - மக்கள் செறிவுமிக்கதுமான இப்பகுதி வாழ்மக்கள் தொடர்ந்தும் அகதி முகாம் வாழ்க்கையில் கிடந்து துன்பப்படுகிறார்கள். இந்த மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளைக் கவனத்தில் எடுக்க அரசாங்கம் மறுக்கின்றது. பதிலாக, தனது இராணுவ நலனகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் சமாதான முயற்சிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அரசின் நிலைப்பாடு மாறிவருகிறது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழினம் ஏமாற்றப்பட்டு வந்துள்ளது. மீண்டும் ஒருமுறை தமிழர்கள் ஏமாறத்தயாரில்லை என்பதை உலகம் புரிந்துகொள்ளவேண்டும்.

அரசு - புலிகள் உடன்பாடு காணப்பட்டு பதினான்கு மாதங்கள் ஆகிய நிலையிலும் இன்னும் மக்கள் இயல்புவாழ்வுக்குத் திரும்பவில்லை. இதுதொடர்பாக மக்கள் நிறையப் பிரச்சினைகளை எதிர் நோக்குகிறார்கள். இந்நிலையை மாற்றியமைத்து மக்கள் சமாதானத்தின் பால் நம்பிக்கை கொள்ளும்வகையில் புதிய கட்டமைப்பு தேவை என்பதை வரலாறு உணர்த்திநிற்கிறது. பட்டறிவும் இதைத்தான் பேசுகிறது.

- என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாழ்க வளமுடன்




## முதலாவது அகவையில்

பெயர் - ர. சானுஜா
முகவரி - சோந்தம்பை, கம்பர்மலை.



## இரண்டாவது அகவையில்



பெயர் - ந.ஜனுசன்
முகவரி - மீசாலை கிழக்கு, மீசாலை.

## இரண்டாவது அகவையில்

பெயர் - மோ.அபிஷானு
முகவரி - கம்பர்மலை, வல்வெட்டித்துறை.



## மூன்றாவது அகவையில்



பெயர் - யோ.ஹர்நிலா
முகவரி - 3 ஆம் யூனிற், தர்மபுரம்.

## ஐந்தாவது அகவையில்

பெயர் - ச.சக்திதாரணி
முகவரி - அம்பலவாணர் வீதி, உடுவில்.



## ஆறாவது அகவையில்



பெயர் - வி.பிரதீபன்
முகவரி - துன்னாலை மத்தி, கரவெட்டி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:---------------------------

முகவரி :---------------------------

பிறந்த ஆண்டு:---------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------------

பெற்றார் ஒப்பம்

# சிறந்த அழகிற்கும், ஆரோக்கியத்திற்கும்

அழகுக் கலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுவரும், கடந்த 10 வருடங்களாக அழகுச் சிகிச்சை நிலையத்தை நடாத்திவரும் திருமதி யோகினி சண்முகநாதன் அவர்களுடனான நேர்காணல்.

**அழகுக் கலையில் நீங்கள் தீவிரமாக ஈடுபட்டதற்கு ஏதுவான பின்னணிகள் பற்றி...?**

சிறுவயது முதல் **Make up** என்றால் எனக்கு நன்றாகப் பிடிக்கும். அதனால் எனக்கு அழகுத்துறையில் ஆர்வம் ஏற்பட்டது. நான் சிறுபிள்ளையாக இருக்கும் போது, எனது தாயார் மணப்பெண் அலங்காரம் செய்யச் செல்வதுண்டு. அதுவும் என்னை இத்துறையில் ஈடுபட வைத்தது. ஆனால், இதை முறையாகக் கற்றுச் செயற்பட வேண்டும் என்ற ஆர்வத்தினால் 1986 ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்று சென்னையில் இருந்தமோனி அன்ரனி அவர்களிடம் 6 மாதங்கள் மிகவும் திறமையாக பயிற்சி பெற்றேன். பின்னர் 1987 இல் யாழ்ப்பாணத்தில் ஒரு அழகுக் கலை நிலையத்தினை ஆரம்பித்து இன்றுவரை சிறப்பாக நடாத்தி வருகிறேன்.

**முக ஒப்பனை மற்றும் தலைமுடிக்குரிய கிறீம் ஆகியவற்றைப் பாவிக்கும் போது பக்கவிளைவுகள் ஏற்படுமா?**

முக ஒப்பனை மற்றும் தலை முடிக்குரிய கிறீம் வகைகள் தற்சமயம் கடைகளிலும் தாராளமாகக் கிடைக்கின்றன. ஆனால், இதில் எல்லா உற்பத்திப் பொருட்களும் நல்லதாக இருக்குமோ என்பது சந்தேகம்தான். அதனால் பெண்கள் எந்த கிறீம் வகைகளை வாங்கும்போதும் மிகவும் கவனமாகப் பார்த்து, நல்ல தரமானதாக வாங்குவது மிகவும் அவசியம். முகத்திற்கும், தலைமுடிக்கும் உபயோகிப்பது எப்போதுமே இயற்கை மூலிகைப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட கிறீம் வகைகளாகவே இருக்கவேண்டும். அவை பக்கவிளைவுகளை ஏற்படுத்தாது. அத்துடன், அவை உபயோகிக்கும் முறையினையும் தெரிந்து உபயோகிப்பது மிகமிக அவசியமானதாகும். இது தவிர இரசாயனப் பதார்த்தங்களைப் பாவிக்கும்போது அவை பக்கவிளைவுகளை ஏற்படுத்தும்.

**அழகுக் குறிப்புகள் பற்றிப் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. இவற்றை உபயோகித்தால் உரிய பலன்களைப் பெற முடியுமா?**

இயற்கை அழகுக் குறிப்புகள் பற்றி இப்பொழுது அநேகம் எல்லா பத்திரிகைகளிலும் வருவதைப் பார்க்கின்றேன். அதில் சில பயனுள்ளதாக இருக்கின்றன. ஆனால், இதற்கு உரியபலன்கள் உடனடியாகச் சாத்தியப்படும் என்று இல்லை. அழகுக் குறிப்புக்களை வாசித்துவிட்டு அவற்றைக் கண்டபடி கையாளவும் கூடாது.

**அழகுச் சிகிச்சைக்காக என்னமாதியான உபகரணங்களைப் பயன்படுத்துகிறீர்கள்?**

குறையுள்ள முகங்களுக்கு **Supper Sonic, High Frequency, Galvanic mechine** போன்ற சாதனங்கள் மூலம் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. குறைகள் உள்ள முடிகளுக்கு **High Frequency** சிகிச்சை முறையினால் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கூடுதலாக எந்த வயது மட்டத்தினர் இதைப் பழகுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்?**

எல்லா வயதுப் பெண்களும் என்னிடம் பயிற்சி பெறுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள். பெண்களுக்கு அழகு செய்வது என்பது வெறும் **Make - up** போடுவது என்று




யோகினி சண்முகநாதன்

பலர் தவறாக நினைக்கிறார்கள். நான் கொடுக்கும் பயிற்சியில் ஒரு பெரிய பாடத்திட்டமே உண்டு. அழகுப் பொருட்கள் என்னென்ன உள்ளன. அவற்றை எவ்வாறு உபயோகிப்பது போன்ற பாடத் திட்டங்களை நேரடியாகவும், குறிப்புகள் மூலமும் போதிக்கின்றேன். தலைமயிர் பற்றிய பல்வேறு விளக்கங்களும் அதைச் சரிப்படுத்த உபயோகிக்கும், பல்வேறு உற்பத்திப் பொருட்களும், அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதனையும் அதை தவறாக உபயோகித்தால் ஏற்படும் தீமைகளையும் விளக்குகின்றேன்.

மேலும் இங்கு பெண்களுக்கான முடி அலங்காரம், முடியை மாற்றியமைத்தல், முகத்திற்கான பல்வேறு சிகிச்சைகள், முகத்தில் தோன்றும் பருக்கள் மற்றும் கரும்புள்ளிகளை நவீன மின் உபகரணம் மூலம் உறிஞ்சும் முறையில் நீக்குதல், தலைமுடியிலுள்ள குறைகளை மூலிகைச் சிகிச்சைகள் மூலமாகச் சரிப்படுத்துதல், மணப்பெண் அலங்காரம், நவீன உபகரணங்கள் மூலமான உடற்பயிற்சி என்பற்றை வழங்கி வருகிறேன். இதில் பொதுவாக 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்டவர்கள் பயன் பெறுகிறார்கள்.

**மணப்பெண் அலங்காரத்திற்கான முக ஒப்பனைக்கு எத்தனை நாட்கள் தேவைப்படுகின்றன? அதைப் பற்றி....**

ஒரு மணப்பெண் தனது திருமணத்திற்கு 2 கிழமைக்கு முன்பே **Facial** செய்துகொள்ளவேண்டும். பின் 5 நாட்களுக்கு முன்னும் மீண்டும் ஒரு **Facial** செய்துகொண்டால் முகம் நன்றாக இருக்கும். 2 தடவை செய்ய முடியாத பட்சத்தில், 5 நாட்களுக்கு முன் 1 தடவையாவது **Facial** செய்து கொள்வது மிகவும் அவசியம். இப்படி செய்து கொண்டால் எமது முகம் மென்மையாக இருக்கும். இதனால், நாம் போடும் **Make - up** சருமத்தில் நன்றாக படிந்து ஒட்டிக் கொள்ளும். இதனால், நீண்ட நேரம் முகத்தில் **Make - up** கலையாமல் இருக்கும். மற்றும் கைகளுக்கு **Waxing** செய்து மிகவும் அவசியமான ஒன்று. **Waxing** என்பது கைகளிலுள்ள முடிகளை அகற்றுவது ஆகும். யாழ்பாணத்தில் அநேகமானோர் இதனை செய்வது மிகவும் குறைவு.




சிலர் மட்டும் இதனை முக்கியமாக செய்துகொள்கிறார்கள். ஆனால், **Facial** ஐப் பொறுத்த வரையில் அநேகமானோர் இங்கு செய்து கொள்கிறார்கள். இன்று யாழ்ப்பாணம் நன்றாக முன்னேறி இருப்பதால், எமது பெண்களும் நன்றாக முன்னேறிவிட்டார்கள். **make- up** என்று வரும் அனைவருமே என்னிடம் **Facial** செய்வீர்களா என்று கேட்பதும் உண்டு. இவ்வளவு தூரம் முன்னேறியுள்ள யாழ்ப்பாண பெண்கள் - **Waxing** இன் முக்கியத்துவத்தையும் அறிந்துகொள்வது நல்லது என நினைக்கின்றேன். ஏன் என்றால் - **Waxing** செய்வதால் எந்தவித பக்கவிளைவுகளும் ஏற்படுவதில்லை. ஆனால், இரசாயனம் சேர்ந்த கிறீம் வகைகளை முடி அகற்றுவதற்கு உபயோகித்தால் பக்கவிளைவுகள் ஏற்படுவதற்கு இடமுண்டு.

சந்திப்பு
உஷா, கலானந்தி


# இயற்கை மூலிகை சாதனங்களே சிறந்தது






# கவிதைச் சோலை

## அந்த நாளை எண்ணி...



பிரியமானவனே, உன்னை ஏன் எனக்குப்
பிடித்திருக்கிறது?
அறிவுக்காகவா? அழகுக்காகவா?
ஒழுக்கத்துக்காகவா?
குணத்திற்காகவா?
கேள்விகள் சாலைகள் போல்
வளைந்து நெளிந்து
அடிவானம் பூமியை முத்தமிடும் புள்ளியில்
சிக்கிடும் என் இதயம்
இதய இழையங்களில் நீக்கமற நீ
உன் நினைவில் தவிக்கும் நான்.

அறிவு பூர்வமாக பிளேட்டோனிக் லவ்
உணர்ச்சிகள் தாரகைகளாக தொலைதூரத்தில்
சமாந்தர வாழ்வுகள் சாசுவதம் என்றுணர்ந்தும்
உன் அன்புக்கடலில் முக்குளிக்கும் நான்
எதிர்காலத்தை எண்ணி
சந்தைப் பொருளாக மாறும்
நாளை எதிர்நோக்கி
மூர்ச்சை அடைகிறேன்.

ரேணுகா நவரட்ணம்.

## ப்ரிய சிநேகா



பாதை திறப்பதாய்
கூறியிரா விட்டால்
திறக்கப்படும் பாதையில்
நான்
நடக்க நினைத்திருப்பேன்
யாரோ திறந்த பாதையில்
என்னை
நடைபழக்க நினைக்கிறார்கள்
என்னால் தான்
ஆமாம் போட முடியவில்லையே
இழுத்துப் போனால்
நானென்ன செய்வது?
நீ திறந்த பாதையை
நான் கண்டிருந்தாலாவது
அவர்களுக்குக் காட்டியிருப்பேன்.
என்
கால்களைக் கட்டிவிட்டாய்
அவிழ்த்து விட்டலாவது
கால்போன போக்கில்
நடந்தாலும் திரிந்திருப்பேன்
பாதையில் அழைத்துச் செல்
அன்றேல்
கால்களையேனும்
அவிழ்த்து விடேன்.

மசூறா ஏ.மஜீட்

# ஒரு பூவின் பயணம்

*உங்களுடைய வரையறைகளின்*
*சாளரத்துக்குப் பின்னால்*
*நீங்கள் என்னைத் தள்ளமுடியாது*
*இதுவரை காலமும்*
*நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள்-*
*கிடந்து*
*வெளியே எடுத்து வரப்பட்ட*
*ஒரு சிறிய கல்லைப் போன்று*
*நான்*
*என்னைக் கண்டெடுத்துள்ளேன்*
*என்னுடைய நாட்களை நீங்கள்*
*பறித்துக் கொள்ள முடியாது.*

சிவரமணியின் வரிகளில் ஆரம்பிக்கின்ற இன்றைய பயணம் - பெண்ணீயம் என்ற பொருளோடு அமைகின்றது. கடந்த பயணத்தில் பிள்ளைகளில் எதிர்ப்பாலார் நாட்டம் பற்றி பெற்றோரினதும், சமூகத்தினதும் பங்களிப்பைப் பற்றிப் பார்த்தோம். பெண்ணின் மீது சமூகம் வலிந்தேற்றியுள்ள, அவள் கடைப்பிடித்து ஆக வேண்டிய நியதிகளும், மரபுகளும் பூப்பின் தருணந்தொட்டு மிகவலிமைப் படுத்தப் படுகின்றன. இம்மரபுக்கள் பெண் எனும் நதிக்கு இடப்பட்ட வரம்புகளாக உள்ளன. மேலைத்தேசக் கலாசாரத்தோடு ஒப்பிடுகையில் சில சந்தர்ப்பங்களில் இவ் வரம்புகள் ஒரு கட்டுப்பாடான வாழ்க்கை முறையை எமது சமூகத்தில் சாத்தியப் படுத்தி இருப்பினும், ஒரு பெண்ணிலை நோக்கில் அவை விமர்சனத்துக்குரியன வாகவே உள்ளன.

பெண்ணியம் என்றால் என்ன? என்பதைச் சந்றே பார்ப்போம். பெண்ணியம் என்பது ஒரு சமூக மாற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கை ஆகும். பிரித்தானியக் கலைக்களஞ்சிய வரைவிலக் கணத்தின்படி - பெண்ணியம் என்பது பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும். அத்தோடு பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய, அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையிலும் அவள் ஆண்களுக்கு நிகரானவள் எனும் உயர் நெறியை நிலைநாட்டுதல் இதன் நோக்காகும்.

## பெண்ணாகி... பூவாகி... போராகி...

### அத்தியாயம் 09

இவ்வாறான ஒரு இயக்கத்தின் தோறறமானது, பெண் - ஆணுக்குச் சமனாக நோக்கப்படாததால் எழுந்திருக்கிறது. பெண்ணியம் என்ற சொல் முதன்முதலில் பதினேழாம் நூற்றாண்டில் பயன்படுத்தப் பட்டது. தற்போது பெண்ணியல், பெண்ணிலைவாதம், பெண்ணுரிமை, பெண் விடுதலை எனப் பலவாறு பேசப்படுகின்றது. வேலைப் பிரிவினை- பால் சார்ந்து கணிக்கப்பட்டபோது சமுதாய வரலாற்றில் முதன்முதலாக வர்க்க வேறுபாடு தோன்றியது. அதனால் உலகில் உருவான முதல் அடிமை பெண்ணினமே எனபார் கணேசலிங்கம். ஆண், பெண் அசமத்துவ நிலையானது- பெண்ணின் உடலியல்கூறு, உளவியல்கூறு, சமூகவியல் பார்வை என்பவற்றினால் ஏற்பட்டுள்ளது.

*எனக்கு*
*முகம் இல்லை*
*இதயம் இல்லை*
*ஆத்மாவும் இல்லை*
*அவர்களின் பார்வையில்*
*இரண்டு மார்புகள்*
*நீண்ட கூந்தல்*
*சிறிய இடை*
*பருத்த தொடை*
*இவையே உள்ளன.*

சங்கரியின் இக்கவிதை - பெண்கள் மீது திணிக்கப்படும் அடக்குமுறைகளுக்குக் காரணமான உடலியல் கூறுகளைச் சுட்டுகிறது. விளம்பரங்களிலும், வெள்ளித்திரைகளிலும் பெண் ஒரு பொருளாகவே நோக்கப்படுகிறாள், விற்பனை செய்யப்படுகிறாள். அங்கு பெண்ணின் உணர்வுகள் கருத்தில் எடுக்கப்படுவதில்லை. அவள் போகப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறாள். அவளது உடலியற்கூறுகள் அதற்கு வழிகோலுகின்றன.

விளம்பரங்களில் பெண்கள் நுகர்பண்டமாகப் பயன்படுத்தப்படும் விதத்தை **The language of Advertising** என்ற நூல் தெளிவாகக் காட்டுகிறது. விளம்பரங்களில் பெண்கள்- தாயாக, மனைவியாக, வீட்டைக் கவனிப்பவராக வெவ்வேறு விதங்களில் சித்தரிக் கப்படுகின்றனர். உடலியல் ரீதியாக மட்டுமன்றி, உணர்வியல் ரீதியாகவும் அவை பெண்ணுக்குப் பல அழுத்தங்களை ஏற்படுத்துகின்றன. சமைப்பது, குழந்தைகள் சரிவர வளரக் கவலைப்படவேண்டியது, துணிதுவைப்பது போன்ற பிரச்சினைகள் தாயினுடையதாகவே கருதுகின்றன. பொருளாதார ரீதியிலான சுமையைத் தாங்குவதற்காக வேலைக்குச் செல்லும் பெண்கள் வீட்டில் மனைவி, மகள், தாய் என்பவற்றாலான அழுத்தங்களையும் தாங்கிக்கொள்கிறாள்.



ச.சாரங்கா

அலுவலகத்தால் தன் கணவனுடன் வீடு திரும்பும் அவள் - ஆணைப்போல சிறிது நேரம் ஓய்வெடுக்க முடிவதில்லை. ஒரு நல்ல பெண் எப்போதும் மற்றவர்களுக்கான "தியாக மூட்டை"யாக வாழ்ந்து கொள்வதையே சமூகம் வேண்டிநிற்கின்றது.

இவ்வாறான உடலியல், உளவியல், சமூகப் பார்வைகளில் பெண்ணின்நிலை அவளை விடுதலை என்ற கருத்திற்கு இட்டுச்சென்றது. அது,

*வாருங்கள் தோழிகளே*
*நாங்களும் வழிசெய்வோம்*
*மண்ணால் கோலமிட்டு*
*அழித்தது போதும்*
*எங்கள் செந்நீரில் கோலமிட்டு*
*வாழ்க்கைக் கோலத்தை*
*மாற்றி வரைவோம்*
*வாருங்கள் தோழிகளே.*

என்று இளங்கவிஞை சிவரமணியைப் பாட வைத்தது. அதுவே முன்பொருநாள் புதுமைப் பெண் என்ற கருத்தினைப் பாரதியைப் படைக்க வைத்தது. பழைய மூட மரபுகளைத் தகரத்தெறிந்து, புதிய சமுதாயத்தைப் படைக்க வல்லவளாகப் புதுமைப் பெண் இருப்பாள். அவள் கல்வியறிவும், பொருளாதார சுதந்திரமும் கொண்டவள் போன்ற கருத்துக்களும், பெண் ஒடுக்கப்படும்போது, அவளுக்கான உரிமைகள் நிராகரிக்கப்படும்போது துணிவாக ஏழுப்பப்பட்ட வினாக்களும் பெண்ணிலைச் சிந்தனைகளை வளர்த்தெடுத்து வருகின்றன. இவ்வரலாற்றினை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருப்பது அவசியம்.

பெண்ணிலை விழிப்புணர்வு கி.மு. 6 ஆம் நூற்றாண்டுகளிலே எழுந்திருந்தது. பெண் பௌத்தத் துறவியாகலாமா? என்ற விவாதம் புத்தருக்கும் சீடர்களுக்குமிடையில் எழுந்ததும் - 39 பெண்கள் அவ் அந்தஸ்தைப் பெற்றதுமான செய்தி இதற்குச் சான்றாகும். அர்த்த சாத்திரம் - கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் விவாகரத்து, விதவாவிவாகம் குறித்துப் பேசுகின்றது. மார்க்றெட் பிரெட்ண்ட் என்பவரால் முன்னெடுக்கப்பட்ட புரட்சியால், 1790 இல் பெண்கள் தற்காலிக வாக் குரிமை பெற்றதாக அமெரிக்கக் கலைக் களஞ்சியம் சொல்கிறது. சென்-ஹாங்-மௌ எனும் சீன மேதை - 1699 - 1711 காலப்பகுதியில் பெண்கல்விக்காகப் போராடினர். இவ்வாறாகப் பெண்ணுரிமைப் போராட்டம் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் ஆரம்பமானது.

பெண்ணுரிமை கருதிய நூல்கள் வெளிவரத் தொடங்கி **A vindication of the rights of women** என்ற நூல் பெண் கல்வியை வற்புறுத்தி 1792 இல் எழுந்தது. திருமணம் ஒரு அடிமைச்சாசனம் என்ற நோக்கினை **Women Rebell** என்ற பத்திரிகை வெளியிட்டது. பெண்ணடிமையின் வக்கிரத்தை **The Subjection of women** (1896) எடுத்துக்காட்டுகின்றது. ஆண் - பெண் சமத்துவத்தைப் பற்றி **One leg crossed over the other** (ஒருகால் மற்றக்காலுக்கு மேலாக உள்ளது) என்ற நூல் 1885 இல் எழுந்தது. ஆரம்பத்தில் மேலைத்தேசத்தவரால் மிகப்பெரும் பாலும் முன்னெனடுக்கப்பட்ட இப்பெண்ணிலைச் சிந்தனைகள், தொடர்ந்து கீழைத்தேசங்களுக்கும் பரவலாயிற்று. 1975 - 1985 ஆகிய பத்து ஆண்டுகள் ஐக்கியநாடுகள் சபையால் பெண்கள் ஆண்டாக நிர்ணயிக்கப்பட்டது. இதனால், உலகெங்கும் பெண்ணியம் பரவி, வளரத் தொடங்கியது.

*கஷ்டங்களை நான் சுமக்க*
*சுகங்களை நீ பெருக்கினாய்*
*அதற்காகவே*
*உனது 'வதை' ஆலையில்*
*என் வாழ்க்கை*
*சக்கை பிழியப்பட்டு வருகிறது*
*என் இனிய வரலாற்றினை*
*ஓலங்களைக் கொண்டு*
*கண்ணீரைக் கொண்டு*
*எழுதுவித்தாய்.*

என்ற அனாரின் கவிதையில் காணுங்கள். காலகாலமாகத் தொடர்கின்ற பெண்ணிலை அடக்குமுறைகள் - பெண்விடுதலை நோக்கிப் பலரையும் உந்தித் தள்ளின. இதனால் மிதவாதப் பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம், மார்க்சியப் பெண்ணியம், மரபுநிலைப் பெண்ணியம், சோஷலிசப் பெண்ணிலை வாதம், கூட்டு சேராப் பெண்ணியம், மகளிர் முன்னேற்றப் பெண்ணியம், மனித இன மேம்பாட்டுப் பெண்ணியம், நவீன பெண்ணிலை வாதம் எனப் பெண்நிலை நோக்கு விரிவடைந்தது.

எமது சமூகத்தில் பெண்ணியச் சிந்தனைகள் என்றால் - ஆண்களுக்கு எதிரான கருத்துக்களாகக் கருதப்படுகின்றன. இது ஒரு ஆரோக்கியமான நிலைப்பாடு அல்ல. மேற்கண்ட பெண்ணிலை நோக்குகள் ஆண் எதிர்ப்போக்கினை ஆதரிக்கின்றனவா? இல்லையா? இவை எமது சமூகத்தில் அவசியந்தான? இவை தாம் கொண்ட இலக்கை நோக்கி நகர்கின்றனவா? எல்லாவற்றிலும் மேலாகப் பெண் நடக்கும் வாழ்க்கைப் பாதையின் நெருக்கடிகளை இவற்றினால் தகர்க்க முடியுமா? என்ற வினாக்களை உங்களிடையே எழுப்புங்கள். அடுத்த பயணச் சந்திப்பில் அவைபற்றிப் பார்ப்போம்

(பயணம் தொடரும்)

## கேக்



### தேவையான பொருட்கள்

கேக்
ஐசிங் சுகர்
மாஜரின்
கலரிங்
கொதிநீர்

### செய்முறை

**Key** வடிவிலான கேக்கினைச் செய்வதற்குக் கேக்கினை வளையாத **Board** இல் திருப்பிப் போடவும். பின் **Key cutting** ஐ வைத்து கத்தியினைச் செங்குத்தாகப் பிடித்து நேராக நின்று வெட்டி எடுக்கவும். கேக்கின் தூளினை அகற்றிய பின், கொதிநீர் கொண்டு **Smoothing** செய்யவும். பின்னர் கிறீமாக அடித்த மாஜரினைக் கேக்கின் எல்லா பாகங்களிற்கும் பூசிக்கொள்ளவும். உருவின் மேற்பரப்பிற்கு **Hard butter - Icing brown** கலரில் குழைத்து (கொக்கோ + **Pink = Brown**) சிறிது சிறிதாகத் தட்டி கொதிநீர் கொண்டு **smoothi ng** செய்யவும். **Key** இன் ஓரங்களிற்கு **Soft Butter Icing** குழைத்து **Basket Nosseing** ஆல் போடவும். **Key** இன் மேல் அடிப்பாகத்திற்கு **Star** போடவும். இவ் **Star** இற்கு மேல் **Sugar balls** வைத்து அலங்கரிக்கலாம். **Key** இன் நீளப்பகுதிக்கு 21 மெழுகுதிரி கொழுத்தலாம். அல்லது 21 வடிவிலுள்ள மெழுகுதிரியைக் கொழுத்தலாம். இதைவிட இரண்டு பக்கங்களிலும் பெயர், திகதி என்பவற்றை எழுதலாம். மேலும் அலங்கரிப்பதற்கு **Rose** பூக்களைக் கொண்டு அலங்கரிக்கலாம். இக்கேக்கானது 21 ஆவது பிறந்ததினத்திற்குச் செய்யலாம்.

## ஐஸ்கிறீம் ருசிக்க ருசிக்க



### தேவையான பொருட்கள்

**பால்மா - 3 பக்கற் (400g x 3), ரின்மில்க் - 1 (525 கிராம்),**
**சீனி - 3 கிலோ, ஜெலற்றின் - 30 கிராம்,**
**கஸ்ரட் பவுடர் - 2 மேசைக்கரண்டி,**
**தண்ணீர் - 6 போத்தல்**
Pineapple **எசன்ஸ் - 2 மேசைக்கரண்டி**
**கொதிநீர் - 1 ரம்ளர்**

### செய்முறை

**பெரிய பாத்திரத்தில் பால்மா, சீனி இரண்டையும் சேர்த்து நன்கு கலந்துகொண்ட பின்பு, ரின்பாலையும், 6 போத்தல் தண்ணீரையும் விட்டுச் சீனி நன்கு கரையும்வரை நன்றாகக் கரைத்துக் கொள்ளவும். பின் ஜெலற்றினை வேறு ஒரு பாத்திரத்தில் இட்டு 1 ரம்ளர் கொதிநீர் விட்டு நன்கு கரைத்துக் கொள்ளவும் - நன்றாகக் கரைந்ததும் மாக்கலவையினுள் கரைத்த ஜெலற்றினை ஊற்றிக் கலந்துகொள்ளவும். பின்பு 1 ரம்ளர் மாக்கலவையில் கஸ்ரட் பவுடரை சேர்த்துக் கட்டி இல்லாமல் கரைத்து, பின் பால்மாக் கலவையுள் ஊற்றி** Pineapple **எசன்ஸ் கலந்து நன்கு கலக்கிகொண்ட பின், அலுமினியப் பாத்திரத்தில் இட்டு** Freesar **க்குள் 2 மணிநேரம் வைத்தெடுத்த பின் நன்றாக மெதுமையாக வரும்வரை அடித்துக் கொண்டபின், அப்பாத்திரத்தை இறுக்க மூடி மீண்டும் குளிர்சாதனைப் பெட்டியினுள் வைத்த பின், 1 மணித்தியாளத்தின் பின் ஐஸ்கிறீம்** Cup **இல் ஊற்றிப் பரிமாறலாம்.**

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
- தமிழ்ப்பழமொழி.

# நமது நோக்கு

## நிரூபிக்கட்டும் பார்க்கலாம் !

விடுதலைப் புலிகள் கோரியிருந்ததன்படியான அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகத்தைத் தருவதற்குப் பதிலாக - மாற்றுயோசனை என்னும் பெயரில் - தெளிவில்லாத, விடுதலைப் புலிகளின் பங்கு பற்றி, உறுதியாகக் குறிப்பிடாத - மேலதிகமான கலந்தாய்வுகளும் விளக்கங்களும் தேவைப்படக்கூடிய உயர் மட்டச்சபை என்னும் ஆலோசனையை அரசாங்கம் பிரேரித்திருந்ததுடன்,

இத்தகைய யோசனைகளால் வட - கிழக்கில் போரால் பெரிதும் பாதிப்புற்றிருக்கும் தமிழ் மக்களுக்குரிய சமூக நிலையை ஏற்படுத்தமுடியாது என்பதை விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டியும் -

"தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்" என்பதாக - தனது மாற்றுயோசனைகளையே அரசாங்கம் மேலதிக விளக்கங்களுடன் வலியுறுத்திவந்தது.

விடுதலைப் புலிகளின் தலைமை பிரேரித்திருக்கும் இடைக்கால நிர்வாக அமைப்புப் பற்றிப் பேச்சுமூச்சுக் காட்டாமல்- அரசாங்கம் தான் எண்ணியதைக் கொண்டே - விடுதலைப் புலிகளைத் திருப்தியடையச் செய்யலாம் எனத் திட்டமிட்டது.

அதேவேளை - தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத இலங்கையின் அரசியலமைப்பையும், சட்டதிட்டங்களையும் காரணங்காட்டி - அவற்றிலிருந்து விலகி, உறுதியான, அதிகாரம் கொண்ட, அரசியல் தலையீடுகளற்ற அமைப்பொன்றை உருவாக்கத் திராணியற்றதாகவே - அரசாங்கம் தன் நிலையை வெளிக்காட்டியது.

ஆனால் - அரசாங்கத்தின் இத்தகைய பொறியொன்றுக்குள் சிக்கிவிடாமல், தமிழ் மக்கள் எதிர்நோக்கி நிற்கின்ற- கடுமையான மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், இயல்பு வாழ்க்கையைக் கொண்டுவரவும் - உருப்படியான, தெளிவான அரசியல் - நிர்வாகச் செயற்பாடுகளை ஆற்றக்கூடிய, தகுந்த அதிகாரங்களையும் - சட்ட அந்தஸ்தையும் கொண்ட ஆக்கபூர்வமான புதிய கட்டமைப்பொன்றை அரசாங்கம் முன்வைத்தால் மட்டுமே - இனிமேல் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்கமுடியும் என்ற நிலைப்பாட்டை, விடுதலைப் புலிகள் இறுதியும் உறுதியுமாக அறிவித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய பிந்திய கடிதத்தில் - விடுதலைப் புலிகளின் இந்த உறுதியான, தெளிவான நிலைப்பாடு தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதேவேளை - விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை தற்போதைய அரசியலமைப்புக்குள் உருவாக்கமுடியாது, சட்ட வரைபுகளும் அதற்கு இடந்தராது எனக் கூறிக்கொண்டு - சமாதானப் பேச்சுக்களை, தமிழ் மக்களின் உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வு - புனரமைப்புக்கான கவனத்திலிருந்து - இறுதியான அரசியல் தீர்வுநோக்கிச் செலுத்தலாம் என அரசாங்கத்தரப்பிலிருந்து விரிக்கப்பட்ட வலைக்குள் சிக்காது-

முதலில் - மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதே அவசியமானது, பொருத்தப்பாடுடையது என்ற நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் அழுத்தந்திருந்தமாக எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்.

"அமைதியின் விளைவுகள் கிட்டாமல், சுமுக நிலையும் கௌரவமான வாழ்வும் ஏற்படாமல், மக்கள் துன்புறும் தற்போதைய மிகக் கொடூரமான கள யதார்த்தத்தைப் புறக்கணித்து - சமாதான முயற்சிகளை - கோட்பாட்டுத் திட்டங்களை நோக்கியும், நிரந்தரத் தீர்வுக்கான வழிமுறைகள் பற்றியுமாக நகர்த்திச் செல்லமுடியாது" என கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதமருக்கான கடிதத்தில் இதனை வலியுறுத்தியிருக்கின்றார்.

'சகல அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியுடன் பெரும் போரொன்றில் சிக்கியிருக்கும், உறுதியற்ற நிலையிலுள்ள உங்களது நிர்வாகத்தால் - இலங்கையில் அரசியல் மற்றும் யாப்பு அமைப்புக்களை மீளமைத்து- இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் கொண்டுவர முடியாது என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம்' என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கின்றார்.

எனவே - அரசாங்கம் புதிய வழிமுறையொன்றினூடாக, சட்ட மற்றும் அரசியலமைப்புத் தடைகளைக் கடந்து- இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை உருவாக்க வேண்டியதை - விடுதலைப் புலிகள் இதன்மூலம் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

அரசாங்கம், அவ்வாறான நிர்வாகக் கட்டமைப் பொன்றை உருவாக்குவதில்தான் - இனி அனைத்துமே தங்கியிருக்கிறது.

ரோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் அருகியிருக்கின்ற நிலையில் - அமைதிப் பேச்சுக்களைத் தொடரவும், நிரந்தர சமாதானத்தை நோக்கி நகரவும் - விடுதலைப் புலிகள் நீட்டியிருக்கின்ற கரத்தை எவ்வாறு அரசாங்கம் பற்றிச் செல்லப் போகிறது என்பதோடு,

உண்மையிலேயே - இந்த அரசாங்கத்துக்கு தமிழர்களுக்கான நீதியான, கௌரவமான அரசியல் தீர்வொன்றைத் தரக்கூடிய துணிச்சல் இருக்கின்றதா என்பதையும் நிரூபித்தாக வேண்டிய கட்டாயம் இப்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

# கச்சாயில் சட்டவிரோத மண்ணகழ்வு; கடல்நீர் உட்புகக்கூடிய ஆபத்து!

தென்மராட்சி - கச்சாய்ப் பகுதியில், நாளாந்தம் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரித்து வருகின்றது.

தினமும் இரவு 10 மணி தொடக்கம் உழவு இயந்திரங்கள், கன்ரர்கள் மூலம் மண் அகழ்ந்து செல்லப்படுவதைக் காணமுடிகிறது.

அண்மைக்காலத்தில் - சூழல் பாதுகாப்புச் சபையினரால், கச்சாய்ப் பகுதி, மண்அகழப் பொருத்தமற்றது என இனங்காணப்பட்டு, இப்பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளிலேயே மண்அகழ அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் - இதனைக் கருத்திற்கொள்ளாது - தினமும் மண் அகழ்வு இடம்பெற்றுவருவது குறித்து அப்பகுதி மக்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

கச்சாய்ப்பகுதியில் மண் அகழ்வதால், கடல்நீர் உட்புகலாம் என்ற அச்சத்தினாலேயே கச்சாய்ப்பகுதிக்கு மண் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனினும், தொடர்ந்து சட்டவிரோதமான முறையில் இப்பகுதியில் மண் அகழ்வு நடைபெற்று வருவது குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதனால், பயன்தரும் தென்னை, பனை போன்ற பலமரங்கள் பாதிப்புறும் நிலையில் காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். (25)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி மக்கள் குறைகேள் சேவை!

## யாழ். மாநகரசபை ஏற்பாடு

ஜூலை மாத நடுப்பகுதியில் அனுஷ்டிக்கப்படவுள்ள உள்ளூராட்சி வாரத்தையொட்டி யாழ். மாநகரசபை, மக்கள் குறைகேள் சேவையொன்றினை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

ஜூலை மாதம் 14 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள உள்ளூராட்சி வாரத்தை அர்த்தமுள்ளதாக்கும் முகமாக, இம் மக்கள் குறைகேள் சேவை நடத்தப்படவுள்ளது.

இதனால் மக்களின் குறைபாடுகள் கண்டறியப்பட்டு அவற்றில் அவசரமானவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யவும் ஏனையவற்றை குறிப்பிட்ட காலத்துக்குள் நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, யாழ். மாநகர மக்கள் தமது குறைபாடுகளை விரிவாக எழுதி, அவற்றை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக யாழ். மாநகரசபையில் இயங்கும் 'உள்ளூராட்சி கொண்டாட்டம் தொடர்பான விசேட அலுவலக வாயிலில்' வைக்கப்பட்டிருக்கும், குறைகேள் விண்ணப்பப் பெட்டியில் சேர்ப்பிக்குமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் கேட்டுள்ளார்.

# ஐ.தே.க நிறைவேற்றுக்குழு எம்பிலிப்பிட்டியவில் கூடும்!

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழு, அடுத்த மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில், எம்பிலியப்பிட்டியவில் கூடவுள்ளது. இது தொடர்பான தீர்மானம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

கடசியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில், பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்போதைய அரசியல் நிலை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் எதேச்சாதிகார நடவடிக்கைகள் தொடர்பாகவும், இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

# பாடசாலை மட்டத்திலான தகவல் தொழில்நுட்ப போட்டி

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான போட்டியொன்றை "மினி இன்போரெல்" என்ற அமைப்பு நடாத்தவுள்ளது.

இப் போட்டியில், ஒரு பாடசாலையில் இருந்து பத்தொன்பது வயதுக்குட்பட்ட மூன்று மாணவர்கள் பங்குகொள்ளலாம். முதற்சுற்றுப் போட்டியில் சகல பாடசாலைகளுக்கும் இடையில் வினாக்கொத்து போட்டியொன்று நடாத்தப்படும். இதில் வெற்றிபெற்று தெரிவு செய்யப்படும் எட்டுப் பாடசாலைகளுக்கிடையே வினாடி - வினாப் போட்டி நடாத்தப்படும். இவ் வினாடி வினாப்போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறும். போட்டியில் வெற்றிபெறும் மூன்று பாடசாலைகளுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்விப்பணிமனைக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கணினி தொடர்பான கண்காட்சியும் எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. மாணவர்கள் இக்கண்காட்சியில் பங்குபற்றி பயன்பெறும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

# அரசாங்கம் சண்டித்தனம் செய்யுமானால் ஜே.வி.பியுடன் இணைந்து வேலை நிறுத்தம்!

## எச்சரிக்கை செய்கிறார் சரத் அமுனுகம

(கொழும்பு)

அரசாங்க அச்சகத்துக்குள் செய்ததைப் போன்று, அரசாங்கம் சண்டித்தனம் செய்ய வந்தால் ஜே.வி.பியுடனும், அனைத்துத் தொழிற்சங்கங்களுடனும் இணைந்து நாடளாவிய வேலைநிறுத்தங்களை மேற்கொள்வோம். இதன்மூலம், அனைதத்துத் தொழிற்துறைகளும் முடக்கப்படும் என்று, எச்சரிக்கை விடுத்துள்ளார் பொ.ஜ.முவின் பேச்சாளர் சரத் அமுனுகம.

கண்டி - கலகெதரவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் புனரமைப்புக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஜே.வி.பியுடன் செய்து கொள்ளப்படும் கூட்டு, தனியே சுதந்திரக் கட்சியுடனான கூட்டணியாக அமையாது. இந்த நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான அனைவரையும் ஒன்றிணைக்கும் முதல் நடவடிக்கையாகும். இதில் யார் வேண்டுமானாலும் இணைந்து கொள்ளலாம்.

யுத்தம் ஓய்ந்து விட்டதாக அரசாங்கம் பிரசாரம் செய்து வருகிறது. ஆனால் யுத்த நிறுத்தத்தால் மீதப்படுத்தப்பட்ட பணம் எங்கே? இந்த அரசாங்கம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் அமைச்சர்களின் பிரச்சினைகளையே தீர்த்து வருகின்றது.

அண்மையில் நியமிக்கப்பட்ட அமைச்சர்களுக்கான அதிகாரங்கள் குறித்து, இதுவரை வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை. அவர்களுக்கு ஜீப்வண்டி மட்டும் வழங்கப்பட்டுவிட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதாகக் கூறினார். ஆனால், இலங்கையின் கடற்பிரதேசத்தில் ஒருபகுதியைப் புலிகளுக்கு வழங்க அவர் முனைகிறார். புலிகள் யுத்தப் பயிற்சி பெறுவதற்கே, அவர் இக் கடற்பகுதியை வழங்க இணங்கியுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையை, தன்னுடன் கலந்துரையாடாமல் ஜனாதிபதி பொறுப்பேற்றதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். ஆனால், இது தொடர்பான யோசனையைத் தெரிவிக்கக்கோரி பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு இதுவரை பதில் அனுப்பப்படவில்லை என்றும் அவர் சரத் அமுனுகம மேலும் குறிப்பிட்டார்.

# இரு பாடங்களில் திறமைச்சித்தியுடன் உயர்தர வகுப்பில் கல்வி கற்கலாம்

## கல்விப் பணிப்பாளர் தகவல்

உயர் தர வகுப்பில் கல்வி கற்பதற்கு க.பொ.த. சாதாரண தரத்தில் மூன்று பாடங்களில் விசேட சித்தியும், மூன்று பாடங்களில் சாதாரண சித்தியும் பெற்றிருத்தல் அவசியமானது. ஆனால், அதில் மாணவர்கள் பெறவேண்டிய மூன்று விசேட சித்தியில் இரண்டு பாடங்களில் விசேட சித்தியினையும், மூன்றாவது பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சாதாரண சித்தியினையும் பாடசாலைமட்டக் கணிப்பீட்டில் திறமைச் சித்தியினைப் பெற்றால் - அம்மாணவன் க.பொ.த உயர்தரத்தை கற்கமுடியும் என யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து பூரண விளக்கமின்மையால், பல மாணவர்கள் உயர்தர வகுப்பில் இணையாமல் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கு கணிதம், தமிழ் ஆகிய இரு பாடங்களில் சித்தியைப் பெற்றிருத்தல் அவசியமானது. 5 பாடங்களில் மட்டும் சித்தியினைப் பெற்றிருந்தால் க.பொ.த உயர்தரம் கற்றுக்கொண்டே அடுத்த தடவை சித்தி பெறாத பாடத்தை பெற்றுக் கொடுத்தல் அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சமாதானப் பேச்சுக்களில் உள்ள நம்பிக்கையை அரசாங்கமும் எதிர்க்கட்சியும் வெளிப்படுத்த வேண்டும்!

வடக்கு - கிழக்குப் பகுதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய அதிகாரங்களை அளிக்கும் விதத்தில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்- ரணில் விக்கிரமசிங்கவின் அரசைக் கேட்டுள்ளது. இடைக்கால நிர்வாக அமைப்புக் குறித்துத் தமிழீழத் தேசியத் தலைவர் தெரிவித்துள்ள ஆலோசனைக்கு அதிகார பூர்வமாகப் பதில் அளிக்கும்படியும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நோர்வே ஊடாக விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர். பிரதமர் தெளிவான, உறுதியான வழிகளில் வழங்குகின்ற அதிகார பூர்வமான பதிலானது, சமாதானப் பேச்சுக்கள் மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் தாம் பங்குபற்றுவது குறித்து, தீர்க்கமான முடிவை எடுக்க உதவும் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

எதிர்பார்த்தது போலவே இந்த விடயம் தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் மிகுந்த பரபரப்பை



யும், சலசலப்பையும் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கை புதியதொன்றோ அல்லது புதுமையான ஒன்றோ அல்ல என்பதுதான் உண்மையாகும். உண்மையில் இது ஒரு பழைய கோரிக்கை மட்டுமல்ல, இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளாலும் கொள்கையளவில் முன்னரே ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டமும்கூட.

கடந்த ஆறுமாத காலத்தில்-பேச்சுவார்த்தைகளின்போது இந்த விடயம் எவ்வாறு அணுகப்பட்டது என்பது குறித்து நாம் ஆழ்மாகத் தர்க்கிப்பதற்கு முன்பு, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் என்ன பேசிவந்துள்ளார்கள் என்பது குறித்து எமது சிந்தனையைச் செலுத்துவோம்.

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி வெளிவந்த சர்வதேச சஞ்சிகையான ரைம் (Time) பத்திரிகையில் கீழ்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

ஜனாதிபதி சந்திரிகா ஒரு சுயாட்சித் தீர்வைத் தருவதாகப் பிரபாகரனுக்கு உறுதியளித்தது மட்டுமல்லாது, அவர் போர் செய்யாமல் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்குத் தேர்தல் எதுவுமின்றி வடமாகாணத்தை அவரது போராளிகளைக் கொண்டு நிர்வகிக்கும் அதிகாரத்தைத் தரத் தயாராகவும் இருந்தார்.

இவ்வாறு ரைம் (Time) சஞ்சிகை 1998 ஆம் ஆண்டு குறிப்பிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென்றோ அல்லது இந்த உறுதிமொழியானது அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்றோ சந்திரிகா அப்போது சொல்லவில்லை.

ஆனால், இதனை அப்பொழுது முழுமூச்சாக எதிர்த்தவர்கள் வேறு யாருமில்லை. இப்போதைய ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினர்தான். ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த உறுதிமொழியானது இலங்கையின் வட - கிழக்குப் பகுதிகளைத் தமிழ்ப் பயங்கரவாதிகளுக்குத் தட்டில் வைத்துத் தாரை வார்க்கும் செயல் போன்றது என்று ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியினர் கதறிக் கொண்டுநின்றது நினைவிருக்கக்கூடும்.

ஆனால், பின்னர் 2000 ஆம் ஆண்டில் இதே ரணில் விக்கிரமசிங்க - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இரண்டு ஆண்டு காலத்திற்கு நிர்வாகம் செய்யலாம் என்று அறிவித்தபோது - சந்திரிகா அம்மையார் தனது நாட்டின் இறையாண்மை பறிபோவதாகக் கூக்குரல் எழுப்பியதும் நினைவிருக்கலாம்.

இலங்கையில் இறுதியாக இடம்பெற்ற பொதுத்தேர்தலுக்கு முன்னரேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையை முன்வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாமல், ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக்கட்சி இதனை ஆதரித்தது மட்டுமன்றி, அதனைத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சேர்த்துக் கொண்டு பகிரங்கமாகப் பிரசாரமும் செய்து, பொதுத்தேர்தலில் வெற்றியும் பெற்றது. இது சிங்கள தேசம்-ரணிலுக்குக் கொடுத்த ஆணையாகும். அதை அவர் நிறைவேற்றுதே ஆண்மையுமாகும்.

இலங்கைத்தீவின் இறையாண்மைக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பால் பங்கம் வந்துவிடும் என்று இப்பொழுது ஜனாதிபதி சந்திரிகா குரல் எழுப்பி வாதாடுகின்றார். இறையாண்மை என்பது ஒரு அரசு உருவாக்குவதல்ல, அரசு நடைமுறைப் படுத்துவதாகும். நாட்டின் இறையாண்மை என்பது அந்த மக்களின் ஆணையாகும். இலங்கைத்தீவில் இரண்டு ஆணைகளை, இரண்டு இனத்தவர்களும் வழங்கியுள்ளார்கள். அவை ஒன்றுக்கு ஒன்று முரணற்றவை அல்ல என்பதை நாம் கவனிக்க வேண்டும்.


தமிழ் மக்களுக்குத் தமிழீழமே தீர்வு என்ற ஆணையைத் தமிழ் மக்கள் முன்னரே வழங்கி விட்டார்கள். அது மட்டுமல்லாது கடந்த பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டணியைத் தேர்ந்தெடுத்ததன் மூலம், தமிழீழ விடுதலைப் புலிகளே ஈழத்தமிழரின் பிரதிநிதிகள் என்பதையும் தமிழ்மக்கள் பறைசாற்றி நிற்கின்றார்கள். அதையே தமிழ்த் தேசியக் கூட்டணியும் உத்தியோக பூர்வமாக அறிவித்துச் செயற்படுகின்றது.

தென்னிலங்கை மக்களும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும, யுத்தம் வேண்டாம் எனறு தங்களின் தீர்ப்பினை, ஆணையை அரசிற்கு வழங்கியுள்ளார்கள்.

இந்த இரண்டு மக்களும் வழங்கியுள்ள ஆணைதான் இறையாண்மையாகும். இவற்றை எதிர்ப்பவர்கள் இலங்கையின் இறையாண்மையை எதிர்ப்பவர்கள் ஆவார்கள். இதனைத்தான் இன்று வரை இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் செய்துவருகின்றன.

இப்படிப்பட்ட அரசியல் கபட நாடகங்களை இந்த இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் நடத்திக்கொண்டிருக்கையில் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமோ - தன்னுடைய மக்களின் எதிர்கால நலனிற்காக, நல்வாழ்விற்காக, சுதந்திரத்துக்காக சில இறுக்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய நிலையிலுள்ளது.

இந்த இடைக்கால நிர்வாகம் என்பது ஒரு அரசியல் தீர்வு அல்ல என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இது தமிழ் மக்களுக்குப் பூரணமான சுதந்திரத்தைத் தந்து, அவர்களுடைய தேசியப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைப்பதற்கான திட்டமும் அல்ல. இந்த இடைக்கால நிர்வாகம் என்பது இடைக் காலத்திற்காகத்தான். இந்த இடைக்காலத்தின்போது எம்முடைய மக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்குக் கொண்டு வந்து, வட - கிழக்குப் பகுதிகளில் புனரமைப்பு, புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திப் பணிகளை முறையாக, ஊழலில்லாத நிர்வாகத்தினூடாக விரைவாகச் செய்வதற்குரிய அதிகாரங்களை முழுமையாகப் பெறுவதற்காகத்தான், இந்த இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் கோரியுள்ளார்கள். இது புதிதாகக்



கோரப்பட்டதும் அல்ல. புரிந்து கொள்ளமுடியாத ஒன்றுமல்ல.

இது தமிழீழ மக்களின் தலையாய பிரச்சினையான தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய வேண்டுகோளோ, கோரிக்கையோ, நிபந்தனையோ அல்ல. இந்தத் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய சமாதானப் பேச்சு வார்த்தைகள் சரியாக, முறையாக எதிர்காலத்தில் நடைபெற வேண்டுமென்றால் - அவற்றுக்கு அடிப்படையாகவுள்ள எமது மக்களின் வாழ்க்கை, முறையான இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும் என்பதற்குரிய செயற்பாட்டுத்திட்டமேயாகும்.

ஆனால், எமது மக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்குத் திரும்ப வேண்டும். அவர்களுடைய தேசத்தின் புனரமைப்பு, புனர்நிர்மாண அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்குரிய அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் கேட்பதே ஒரு குற்றமென்றும், அது சட்டவிரோதம் என்றும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் கூக்குரலிட்டு எதிர்ப்புத் தெரிவிப்பார்களேயானால் - எதிர்காலத்தில் எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைத்தர இவர்கள் எப்படித்தான் சம்மதிப்பார்கள் என்ற கேள்வியும் எழுகின்றது அல்லவா?

இயற்கையின் கோரத்தாண்டவத்தால் இன்னலுற்று, அவதிப்படுகின்ற தென்னிலங்கை மக்களுக்கு உடனே அபயக்கரத்தை அரசு வழங்கியது. அயல் நாடுகளும் அதில் இணைந்து கொண்டுள்ளன. இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பைக் கோரி நிற்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ்மக்களும் தங்கள் பங்கிற்குப் பங்களிப்பை அளித்து வருகின்றார்கள். தமிழீழ மக்களின் பங்களிப்பானது தங்களது கோரிக்கைக்கு அடிக்கோடிட்டு நிற்கவில்லையா என்ன? ஏனென்றால் நிவாரணங்கள், புனருத்தாரண, புனர் நிர்மாணப் பணிகள் உடன் செய்யப்பட வேண்டும், வழங்கப்படவேண்டும். தென்னிலங்கைக்கு உதவியென்றால் அதில் சட்டப்பிரச்சினைகளோ, இறையாண்மையோ அல்லது பயங்கரவாதமோ தடையாக இல்லை. ஆனால், சட்டத்தரணிகளையே சமுதாயமாகக் கொண்ட தமிழ்ச் சமுதாயத்திற்கு மட்டும் சட்டமே தடையாக நிற்கின்றதே?

இந்த விடயங்களை நாம் தர்க்கித்து நிற்கின்ற இவ்வேளையில், ஏன் முதலே எம்மவர்கள் இறுக்கமாக நடந்துகொள்ளவில்லை என்ற கேள்விகளை எம்மவர்களே எழுப்பி நிற்பதையும் காண்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முதற்சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இதனை இறுக்கமாகப் பிடித்து, பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகியிருந்தால் நிலைமை என்னவாக இருந்திருக்கும்? தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சமாதானத் தீர்வில், பேச்சுவார்த்தையில் நம்பிக்கையில்லை என்ற பிரசாரம்தான் உலகெங்கும் ஓங்கியிருக்கும். ஆனால், இன்று ஆறுமாத காலத்திற்குப் பின்பு வன்னிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்துள்ள சகல வெளிநாட்டவர்களும் அதாவது ஜப்பானிய, நோர்வே, ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் யாவரும் ஒன்றை மட்டும் வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறார்கள். அது, கடந்த 15 மாதகாலப் பகுதியில் தமிழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றமடையவில்லை, அவர்களுடைய பகுதிகளில் புனரமைப்பு, புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்திப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்பதை இந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளே இன்று 15 மாத காலத்தின் பின்பு ஒப்புக்கொள்கின்றார்கள்.

அரசிற்கு இதுவரை காலமும் வாய்ப்பை வழங்கிவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்த நிலையில் தமது நிலைப்பாட்டை இறுக்கமாகத் தெளிவுபடுத்தியது. இந்தவேளையில், விடுதலைப் புலிகள் - அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டுவிட்டார்கள் என்ற நம்மவர்களில் நல்லவர்கள்கூட நம்பக கூடும். அது உண்மையல்ல.

இந்தவேளையில், நாம் ஒன்றைக் கவனிக்கவேண்டும். 15 மாத காலத்தின் பின்பும் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களின் பலத்தை இழக்கவில்லை, தங்களுடைய பாதையை மாற்றவில்லை. மாறாகத் தங்களுடைய சரியான அரசியல் நகர்வின் காரணமாக உலக நாடுகளே இன்று ஒப்புக்கொள்கின்ற வகையில் தமிழீழ மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை நியாயப் படுத்தியுள்ளார்கள்.

தவிரவும், இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பலத்தின் அடிப்படையில்தான் நின்று பேசுகிறார்கள். அல்லது பேச்சைத் தவிர்க்கின்றார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் தேவையில்லாமல் நேரத்தைக் கடத்தி விட்டார்கள் என்று வாதிடுபவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஊடாகத் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கும், தற்போதைய நாளாந்த வாழ்வியல் பிரச்சினைக்கும் தீர்வு காணலாம், காண வேண்டும் என்பதற்காக அவர்கள் கடல் கடந்தும் சென்று பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றியுள்ளார்கள். இவர்கள் முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பொழுதே விலகியிருந்தால் என்ன நடந்திருக்கும்? பேச்சுவார்த்தை முறிந்திருக்கும், போர் தொடங்கியிருக்கும். உலக நாடுகளும் நம்மவர்களின் பிரச்சினையை முழுமையாகப் புரிந்திருக்காது.

ஆனால், இன்றைய நிலைமை என்ன? தமிழீழ மக்களுக்கான தேசியப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றது. என்பதையும், தஙகளுடைய நாளாந்த வாழ்வியல் பிரச்சினையும் தீர்க்கப்படாமல் இருக கின்றது என்பதையும் உலகநாடுகள புரிந்து கொண்டது மட்டுமன்றி, ஏற்றுக்கொள்ளவும் செய்கின்றன.

இந்த ஆறுமாதகாலச் சமாதானப் பேச்சுவார்த்தைகளினால் வெளிப்படையான பயன் ஏதுவும் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், பயனுக்குரிய பாதைகளை எல்லாம் விடுதலைப் புலிகள் முயற்சி செய்து பார்த்ததும் அன்றி முட்டுக்கட்டையாக இருப்பவர்களை அகற்ற வேண்டும் என்பது பொருத்தமான நேரத்தில் ஓர் அழுத்தத்தைத் தந்திருக்கிறார்கள். உண்மையில் இந்த அழுத்தந்தான் எதிர் காலத்தில் சமாதானப் பேச்சுக்கள் சரியான பாதையில், முறையான வேகத்தில் செல்வதற்கு வழிவகுக்கும்.

தமிழீழ மக்களின் வாழ்க்கை-இயல்பு நிலைக்குத் திரும்புவதும், அவர்களுக்குரிய புனருத்தாரண, புனர்நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கும் சட்டம் இடையூறாக இருக்குமானால் அது நீதியான சட்டம்

**மெல்பேர்ணிலிருந்து**
**சபேசன்**

அல்ல. ஓர் இடைக்கால அதிகாரத்தைத் தருவதற்கு ரணில் அரசிற்கு முடியாதென்றால் அல்லது அதனைத் தருவதற்குச் சந்திரிகாவின்



அதிகாரம் தடுக்குமென்றால், பின்னாளில் தமிழரின் தேசியப் பிரச்சினையை இவர்கள் எவ்வாறு தீர்த்து வைக்கப் போகிறார்கள்? என்ற கேள்வியும் பெரியதாக எழுந்து நிற்கிறது.

இந்தநிலையில் விடுதலைப் புலிகள் எந்த அரசை நம்பினார்கள்? அல்லது புருசனை எப்போது கைவிட்டார்கள்? என்றுதான் எமக்குக் கேட்கத் தோன்றுகின்றது. இன்று இந்த வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆயுத பலத்தோடும், ஆளணிப் பலத்தோடும் மிகவும் திடமாகப் பலம் பொருந்திய நிலையில்தான் இருக்கின்றதே தவிர, எதையும் இழந்துவிடவில்லை என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்தப் பலந்தான் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசை வரவழைத்தது. இந்தப் பலத்தினூடேதான் இன்றைய அரசியல் அழுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கொடுத்து வருகின்றது.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தங்களுக்கு இருக்கும் நம்பிக்கையை நிரூபிக்கும் வகையில் செயற்படவேண்டிய தருணம் இது. அதனைத் தமிழ் மக்களுக்காக மட்டும் அல்ல. தங்களுடைய சிங்கள மக்களின் நலனுக்காகவாவது செய்வார்கள் என்று நம்புகின்றோம். ❖

# ரஷ்ய விமானப்படை பஸ் மீது தற்கொலைப் படை தாக்குதல்!

## செச்னிய எல்லையருகே 15 பேர் பலி



சிதிலமான பஸ்

ரஷ்யாவின் வடக்கே கார்கஸஸ் பகுதியில் நடந்த தற்கொலைத் தாக்குதலொன்றில் - 15 பேர் கொல்லப் பட்டதுடன், 12 பேர்வரை படுகாயமடைந்தனர்.

செச்னிய எல்லைக்கு அருகிலுள்ள மொஸ்டோக் நகரில் - பஸ்ஸொன்றின் மீது இத்தற்கொலைத் தாக் குதல் நேற்று நடத்தப்பட்டது.

இந்த பஸ் - ரஷ்ய விமானப்படையினரையும் பொதுமக்களையும் ஏற்றிச்சென்றுகொண்டிருந்தது.

இந்த பஸ்ஸை வழிமறித்த பெண் தற்கொலைப் படை யாளி, பஸ்ஸின் கதவுகளைத் திறக்க முயற்சித்து, அது கைகூடாமற்போகவே - தன்னைத் தானே வெடிக்க வைத்ததாக - ரஷ்ய பொலிஸ் உயரதிகாரியான சோஜ! பிரிடென்ஸ்கி தெரிவித்தார்.

ஆனால் - சம்பவத்தை நேரில் பார்த்த வேறு சிலரோ - குறிப்பிட்ட பெண், பஸ்ஸின் அடியினுள் தன்னை செலுத்திய பின்னரே, வெடிக்க வைத்ததாகத் தெரிவித்தனர்.

செச்னியாவில் உட்புகுந்துள்ள ரஷ்யப் படைகளின் தலைமையகமாக, மொஸ்டொக் நகரே கடந்த பத்தாண்டுகளுக்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பஸ்ஸில் பயணம் செய்த விமானப் படையினர் 30 பேரில, சிலர் - செச்னியாவில், ரஷ்யப் படைகளின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக, விமானநிலையம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த விமானமோட்டிகள் என்றும் கூறப்படுகிறது.

செச்னியப் போராளிகளுக்கு எதிராக - அவர்களின் மலைப் பகுதி மறைவிடங்கள் மீது ரஷ்யப் படையினர் கடும் தாக்குதல் மேற்கொண்டுவரும் வேளையில், இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

அண்மைக்காலமாக - செச்னியப் போராளிகள் அதிகளவில் தற்கொலைத் தாக்குதல்களில் ஈடுபட்டிருப் பது, ரஷ்ய அதிகாரிகளிடையே பதற்றத்தை ஏற்படுத்தி யிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

### ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பது உண்மையே என்கிறார் புஷ்

ஈராக்கில் பேரழிவுதரும் ஆயுதங்கள் இருந்ததை, தான் எப்படியும் உறுதிப்படுத்தியே தீருவேன் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் சூளுரைத்துள்ளார்.

கட்டாரில், அமெரிக்கப் படையினரிடையே பேசும்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

சதாம் தனது நாட்டில் - பேரழிவு ஆயுதங்களை மறைத்துவைத்திருந்தது உண்மையே. அமெரிக்கப் படைகள் அவற்றைக் கண்டுபிடித்து, உரிய் முறையில் வெளிப்படுத்தும் என்றும் அவர் அங்கு தொவித்தார்.

ஆனால், இன்றுவரை அவ்வாறான பேரழிவுதரும் ஆயுதங்கள் எதுவும் ஈராக்கில் கண்டுபிடிக்கப்பட வில்லை என்றும் -

ஈராக் மீதான போரை ஆரம்பிக்கும் தந்திரமாகவே - அமெரிக்காவும், பிரிட்டனும் இவ்வாறு பிரசாரம் செய்ததாகவும் தற்போது தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இதேவேளை - பேரழிவு ஆயுதங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக, 1,400 நிபுணர்கள் - நேற்றுமுன்தினம் இரவு பக்தாத் சென்றடைந்தனர்.

## சதாமின் புதல்விகளுக்கு பிரிட்டன் தஞ்சமளிக்காது!



சதாமின் புதல்விகள்

சதாம் ஹுசைனின் புதல்விகள் இருவருக்கும் பிரிட்டனில் புகலிடம் அளிக்கப்படமாட்டாதென, பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

சதாம் ஹுசைனின் புதல்விகளிடமிருந்து அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பம் வந்தபோதும் - அவை ஏற்றுக்கொள்ளப்படாது, அவர்களுக்கே திருப்பியனுப்பப்பட்டுவிட்டதாக பிரிட்டிஷ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மனிதஉரிமை மீறல் குற்றங்களில் சதாம் குடும்பத்தினர் ஈடுபட்டுள்ளதால், இந்த விவகாரத்தை நாம் கவனிக்கப்போவதில்லை என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை - லண்டனிலிருந்து வெளிவரும் 'சன்' பத்திரிகை - சதாமின் புதல்விகளான ராகாட் வயது (35), ரானா (வயது 33) ஆகியோர் தமது பத்துப் பிள்ளைகளுடனும் லட்ஸ் நகருக்குள நுழைந்து, அங்கு ஏற்கனவே. வசித்துவரும் சதாமின் நெருங்கிய உறவினர் ஒருவருடன் வாழத் தொடங்கிவிட்டதாகச் செய்தி வெளியிட்டிருந்தது.

இதேவேளை - சதாமின் மனைவி சாஜிதாவும் பிரிட்டனில் அடைக்கலம் கோரியிருப்பதாக 'டெய்லி மெயில்' இதழ் தகவல் வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

# தலிபான்கள் - அரச படையினர் ஆப்கானிஸ்தானில் கடும் சண்டை!

## 46 பேர் வரையில் பலி, பலர் படுகாயம்



அமெரிக்காவின் தேடுதல்.

ஆப்கான் தென்பகுதியில் - அரச படைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே நடைபெற்ற கடுமையான சண்டையொன்றில், 46 பேர் கொல்லப பட்டனர், பலர் படுகாயமடைந்தனர்.

ஸ்பின்பொல்டாக் என்ற எல்லைப்புற நகருக்கு அண்மையில் நடந்த இந்தச் சண்டையில் - 40 தலிபான்களும், 6 அரச படையினரும் கொல் லப்பட்டனர்.

இச்சண்டையில் ஈடுபட்ட தலிபான்கள், பாகிஸ்தானிலிருந்து வந்திருப்பதாக வெளியான தகவல்களையடுத்து, ஆப்கான் - பாகிஸ்தானிய அரசுகளிடையே முறுகல்நிலை ஏற் பட்டுள்ளது.

கடந்த ஒருவாரமாகவே - தலிபான்கள் இப்பகுதியில் தாக்கிவிட்டு ஓடிமறையும் உத்தியுடன், பல தாக்குதல்களை நடத்தி வந்ததைத் தொடர்ந்தே - இந்தக் கடும் சண்டை நடைபெற்றிருக்கிறது.

தலிபான்களில் பலர் இன்னமும் சில உள்ளூர்க் கிராமங்களில் மறைந திருப்பதாக ஆப்கானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - தலிபான்களைத் தேடியழிக்கும் நடவடிக்கைகளில், அரசாங்கப் படைகள் மட்டுமே ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் நடந்த கடும் சமரில் - சாதாரண ஆயுதங்கள் மட்டுமல்ல, ஆர்.பி.ஜி. ரக ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க - ஆப்கானின் ஏனைய பகுதிகளில் அமெரிக்கா தலைமையிலான படைகள் - தொடர்ந்தும் தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக வொஷிங்ரன் தெரிவித்துள்ளது.

## புஷ்ஷின் சமாதானத் திட்டத்தை சாடுகின்றார் யசீர் அரபாத்!

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் புதிய சமாதானத் திட்டத்தை, பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் கடுமையாகச் சாடியுள்ளார்.

இப்புதிய சமாதானத் திட்டத்தில், யசீர் அரபாத்தை ஒதுக்கிவிட்டு, பலஸதீனத்தின் புதிய பிரதமர் மஹ்மூட் அப்பாஸை முன்னிறுத்தி - ஜனாதிபதி புஷ் நகர்வுகளை மேற்கொண்டுவருகையிலேயே, இக்கண்டனம் வெளியாகியுள்ளது.

இஸ்ரேலியப் பிரதமர் ஷரோன்- பலஸ்தீனர்களுக்காக எதனையும் விட்டுக்கொடுத்துவிடமாட்டார். பலஸ்தீன மண்ணிலிருந்து, ஒன்றிரண்டு குடியிருப்புக்களை மட்டும் அகற்றிவிட்டு, இஸ்ரேல் முழுவதுமாக பலஸ்தீனத்திலிருந்து விலகிவிட்டது என்றே கூறப்படுகின்றது என்றும், யசீர் அரபாத் தெரிவித்துள்ளார். இதேவேளை - பலஸ்தீனர்களின் ஆயுதத் தாக்குதல்களை, யசீர் அரபாத் தடுக்கத் தவறியமைக்காகவே - தாம் அவரைப் புதிய சமாதானத் திட்டத்திலிருந்து ஒதுக்கியதாக - இஸ்ரேலும், அமெரிக்காவும் கூறுகின்றன.

## செய்திப் படங்கள்




ஹொங்கொங் விமானநிலையத்தில் இன்னமும் 'சார்ஸ்' பீதி தணியவில்லை. இந்தச் சீனப் பெண்களும் பாதுகாப்புடனேயே நடமாடுகின்றனர்.



கடும் வெயிலால் பாளம் பாளமாக வெடித்திருக்கும் நிலத்தில் - மழைவேண்டி பூஜை நடைபெறுகிறது. இங்கல்ல - இந்தியாவின் ஹைதராபாத்தில்.



வடகொரிய இராணுவத்தினரும் தற்போது உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். அந்நாட்டு ஜனாதிபதி, அதிகாரிகள் சகிதம் இவ்வாறு செய்கை பண்ணப்படும் நெல் வயலொன்றைப் பார்வையிடுகின்றார்.



ஜோர்டானில் இஸ்ரேல், அமெரிக்க, பலஸ்தீனத் தலைவர்கள் சந்திப்பில். அமெரிக்க ஜனாதிபதி புஷ் இருவரையும் கட்டுப்படுத்துகிறாரா....?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யு.எஸ்.எய்ட்.அதிகாரிகள் நேற்று யாழ் வந்தனர்!

(யாழ்ப்பாணம்)

யு.எஸ்.எய்ட் எனப்படும் சர்வ தேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் பிரதி நிர்வாகியான ப்ரெட்ரிக் டபிள்யூ.ஷிவிக் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் யாழப்பாணத்திற்கு வந்த இக்குழுவினர்-யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்து கலந்துரையாடினர்.

பின்னர் - யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்களையும் இக்குழுவினர் பார்வையிட்டனர்.

தொடர்ந்து- தென்மராட்சிக்கும், காரைநகருக்கும் சென்று யு.எஸ். எய்ட் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் மிதிவெடி அகற்றும் பணிகளையும் இவர்கள் பார்வையிட்டனர்.

# தனக்கான நெருக்கடிகளிலிருந்து தப்பவே அரசாங்கம் அக்கறை செலுத்துகிறது

## யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

பாரிய நிதி நெருக்கடியிலும், அரசியல் நெருக்கடிகளிலும் சிக்கியுள்ள இலங்கை அரசு, இவற்றிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறதே தவிர, தமிழ் மக்களுக்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட - யுத்தப் பாதிப்புக்களுக்கும், அழிவுகளுக்கும் பரிகாரம் காண எதுவித அக்கறையும் செலுத்தவில்லை. இவ்வாறு, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளமபரிதி தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற, சூழல்தினம் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே, இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் சமாதான முயற்சிகள், எங்களுடைய மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே அமையும்.

தற்போதைய அரசு, சிறிலங்காவின் அரசியலமைப்பிற்குப் புறம்பாக, இடைக்கால நிர்வாகத்தை அமைக்க முடியாது, அது சட்டச் சிக்கலான விடயம் எனக் கூறியுள்ளது. ஆனால், இதே சட்டத்தைக் கொண்டுவந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே, இச்சட்டத்தை மீறிய சம்பவமும் உண்டு என அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

## சூழல் பாதுகாப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றுச்சூழல் தினம் தொடர்பான கருத்தரங்கு, பொருண்மிய மதியுரையகத்தின் ஏற்பாட்டில், யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில்- பல அறிஞர்களும், நிபுணர்களும் தமது ஆய்வுரைகளை வாசித்தனர்.

## தமிழகத்திலிருந்து...

மா.பாக்கியம் (வயது 46 - வவுனியா), உ.சண்முகப்பிரபா (வயது 27 - வவுனியா), இ.சாந்தினி (வயது 18 - மன்னார்), நா.ஜெயந்தினி (வயது 33- வவுனியா), ந.சந்திரவாணி (வயது 26 - முல்லைத்தீவு), உ.விஜயலட்சுமி ( வயது 33 - வவுனியா), இ.அமபிகா (வயது 25- வவுனியா), சு.இராசம்மா (வயது 55- கிளிநொச்சி), சு.இளங்கோ (வயது 19 - கிளிநொச்சி), மு.கவிதா (வயது 9 - கிளிநொச்சி), சி.சாந்தரூபன் (வயது - 3 - கிளிநொச்சி), இ.கஸ்தூரி (வயது 19 - வவுனியா), சு.ஜீவரத்தினம் வயது 27 - வவுனியா), ஜீ.கோபிநாத் (வயது 6 மாதம் - வவுனியா), ம.சகாயநாதன் (வயது 40 - மன்னார்), அ.அல்பிரட் (வயது 50 - பேசாலை), பி.லூசியா (வயது 25 - மன்னார்), அ.எமர்சன் (வயது 28 - உரும்பிராய்), ஜெ.கோபாலப்பிள்ளை (வயது 45 - வட்டுக்கோட்டை), க.செல்வன் (வயது 24 - மன்னார்), இ.ஜொய்ஸ்குரூஸ் (வயது 40 - மன்னார்), பு.ரஞ்சன் (வயது 3 - வவுனியா), வே.சிவகுமார் (வயது 32 - மன்னார்), பு.குவேந்திரன் (வயது 23 - மன்னார்), கு.சந்திரன் (வயது ஒன்றரை - மன்னார்), த.துளசிதாசன் (வயது 36 - ஏறாவூர்) ஆகியோரே இந்தியாவிலிருந்து வந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் தலா மூவாயிரம் ரூபா வீதம் படகுக் கட்டணமாகச் செலுத்தியே நெடுந்தீவுககு வந்துள்ளனர். இவர்கள் தற்போது நெடுந்தீவு சென்.அன்ரனீஸ் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இம்மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் இதர வசதிகளை, நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் வழங்கி வருகின்றது.

மீன்பிடிப்படகுகளில் இம்மக்கள் வருவதைக் கண்ட நெடுந்தீவு மீனவர்கள் - இது குறித்து, நெடுந்தீவுக் கிராமசேவையாளரிடம் தெரிவித்ததையடுத்து, அவர் பொலிஸாருடன் தொடர்புகொண்டார்.

பின்னர் - பொலிஸார் மக்கள் ஒவ்வொருவரையும் கடுமையாகப் பரிசோதித்ததுடன் விசாரணையும் செய்தனர்.

அதன் பின்னரே, அவர்கள் நெடுந்தீவுக்குள் அனுமதிக்கப்பட்டனர். இம்மக்கள் - இன்று யாழ்ப்பாணம் அழைத்து வரப்படவுள்ளதாகவும், அவர்களின் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(113)

## யாழ்.குடாநாட்டு....

சனத் கருணாரட்ண தெரிவிக்கையில்,

குறிப்பிட்ட இராணுவ அதிகாரி இத்தகவலை வெளியிட்டாரா என்பதை, அறிவதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அரச காணிகள், மக்கள் வாழ்விடங்களில் உள்ள படையினர் வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின்றனரே தவிர, இராணுவக் கட்டமைப்பில் மாற்றம் எதுவும் இடம் பெறவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## யு.என்.எச்.சி.ஆர்....

மாநாட்டில் தாம் பங்குபற்றாமைக்கான காரணங்களை அரசியற்துறைப் பொறுப்பாளர், ஐ.நா. அதிகாரிகளுக்கு எடுத்து விளக்கினார். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவி ஆணையாளர் அரபாத் ஜமால் மற்றும் கொழும்பு வதிவிடப்பிரதிநிதி நீல் றைற் ஆகியோருட்பட, மேலும் இரு அதிகாரிகளும் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(க)

## இன்று மாணவர்...

லங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டுவந்த நடவடிக்கைகளில் ஒன்று தான் கல்வித்தரப்படுத்தல் ஆகும்.

1970 களில் - சிங்கள மாணவர்களுடன் ஒப்பிடுகையில் தமிழ் மாணவர்கள் கல்வியில் மிகத் திறமையானவர்களாக விளங்கினார்கள். இதனால், பல்கலைக்கழகங்களுக்கு அதிக எண்ணிக்கையில் சென்றார்கள். இதனை சகித்துக்கொள்ளாத சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் - தமிழ்களின் கல்வியுரிமையைப் பறிக்க முற்பட்டார்கள். அதற்காக அவர்கள் அமுல்படுத்திய கல்வித்தரப்படுத்தல் மூலம் திறமைமிக்க பல மாணவர்கள், பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்தனர்.

அதன் காரணமாக விரக்தியுற்ற மாணவர்கள், அதற்கு எதிராக போராடத் தலைப்பட்டனர். அவ்வாறு பேரினவாத இனஅடக்கு முறைக்கெதிராக, குரல் கொடுக்க முற்பட்டவர்களில் - முக்கியமானவர்தான் தியாகி பொன்.சிவகுமாரன் அவர்கள். இவர் மாணவனாக இருந்து கொண்டே, கல்வித்தரப்படுத்தலுக்கு எதிராகப் போராடுவதன் மூலம் - இன ஒடுக்குமுறைக்கு எதிரான மாணவர் சக்தியின் எழுச்சிக்கு வித்திட்டவரானார்.

சிங்கள இனவாதத்தின் அச்சுறுத்தலுக்குப் பணியாது, சலுகைகளுக்கு மண்டியிடாது துணிச்சலுடன் அதனை எதிர்த்து நின்றார். ஒருவேளை சுற்றிவளைக்கப்பட்டபோது, எதிரியிடம் உயிருடன் அகப்படக் கூடாது என்ற தன்மான உணர்வு மீதூரப்பெற்று, சயனைற் அருந்தி வீரகாவியமானார். அதை நினைவு கூரும் முகமாகவே தமிழீழ மாணவர் எழுச்சி நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. தியாகி பொன். சிவகுமாரனுடன் ஆரம்பித்த வரலாறு மாணவர்களின் விடுதலைப் போராட்டத்துடன் ஒன்றிக் கருத்தொருமைப்பாட்டுடன் பேரெழுச்சியாக மாறிவருகிறது.

உலக நாடுகளில் இடம்பெற்ற மாணவர் புரட்சிகளையும், எழுச்சிகளையும் அதனூடாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும், வரலாற்றுத் திருப்பங்களையும், பிறநாட்டு சரித்திர நூல்கள் ஊடாகவும், ஊடகங்கள் வழியாகவும் நாம் படித்தோம். இன்று அந்நிலை மாறி "உலக மாணவர் சக்திக்கு முன்னுதாரணமாக விளங்கும் அளவிற்கு தமிழீழ மாணவர் எழுச்சி பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் வலுச்சேர்த்துள்ளது.

இம்மாணவர் எழுச்சியானது, தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின்- "போராட்டம் கல்விக்கு கவசம், கல்வி போராட்டத்திற்குக் காப்பரண்" என்ற கருத்தோடு ஒன்றிணைகிறது.

இது எமது இனம் சுயநிர்ணய உரிமையோடு - தமிழ் இனமாக, மரபுவழித் தாயகத்தில் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழும் நிலையை உருவாக்குமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதற்காக இன்றைய நாளில் மாணவர்கள் அனைவரும் அணிதிரள்வோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## முக்கிய அறிவித்தல்

**இலங்கையில் தரமான உப்பினை உற்பத்தி செய்யும் ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் , யாழ். மக்களுக்கான உப்பு விநியோகத்தினை (பரதன் மல்ரி சேவிஸ்) "S.P.O" தனியார் விற்பனை நிறுவனத்தினூடாக மட்டுமே மேற்கொள்கிறது. எனவே எமது தரமான உப்பு தவிர்ந்த தரங்குன்றிய பாவனைக்கொவ்வாத உப்பு வகைகள் எமது நிறுவனத்தில் உற்பத்திசெய்யப்பட்டவையெனக்கூறியும், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையெனக்கூறியும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சில முகவர்களால் விநியோகிக்கப்படுகிறது. விற்பனையாளர்கள் பரதன் மல்ரி சேவிஸ் விற்பனைச் சிட்டையூடாக மட்டுமே கொள்வனவை மேற்கொள்ளுமாறும், அவ்வாறான கொள்வனவிற்கே விற்பனைக் கழிவுகளும், முதன்மைப்படுத்தப்பட்ட சீரான விநியோகமும் மேற்கொள்ளப்படும் என்பதனை தெரியப்படுத்துகிறோம்.**

**உப்பு உற்பத்தி நிறுவனம்,**
**ஆனையிறவு.**

(சி/1052)





## நண்பர்களுடன்...

நகைக்கடையின் மேல்மாடியில் படுத்துறங்கியுள்ளார். காலை வேளையில் எழுந்த மற்றைய இரு இளைஞர்களும், தமது நண்பனைத் தட்டி எழுப்பியுள்ளனர். ஆனால், அவர் எழும்பாது குப்புறக் கிடந்தமையால் நித்திரை என எண்ணி விட்டு சென்றுள்ளனர். சிறிது நேரத்தின் பின் மீண்டும் தட்டியெழுப்பிய போதும் எழும்பாததையிட்டு சந்தேகம் கொண்டு, தமது கடையுரிமையாளருக்கு அறிவித்து, அவரையும் அழைத்து வந்து பார்த்தபோது- குறிப்பிட்ட நபர் இறந்திருப்பது தெரியவந்தது.

இவரது சடலம் பொலிஸாரால், யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மேற்படி நபர், ஏற்கனவே காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றவர் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.நகரின் நகைக்கடை ஊழியர்கள் இருவர் தாம் பணியாற்றும் கடைகளிலேயே சடலமாகக் கண்டெடுக்கப்பட்டது- ஒரு வாரத்தில் இது இரண்டாவது சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது.

(11,121)

## இடைக்கால...

சர்வதேச சமூகம் வழங்கவுள்ள ஆதரவு மிக முக்கியமானது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளை, பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளமுடியும்.

கடிதங்களைப் பரிமாறிக்கொள்வதன் மூலம், இந்தப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்றை எட்டமுடியாது.

பல்வேறு துறைகளிலும் தற்போதைய நிலைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு திட்டங்களை அமுல்படுத்த புதிய கட்டமைப்பொன்று உருவாக்கப்படவேண்டும்.

அரசாங்கம், விடுதலைப் புலிகள், சர்வதேச சமூகம் ஆகியவை அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் மூலம் சமாதான நடவடிக்கைகள் மிகவும் வலுவான நிலையிலேயேயிருக்கின்றன.யுத்தம் வேண்டாம் என்று மக்கள் வலியுறுத்தியுள்ளதை அனைவரும் உணர்ந்து கொண்டுள்ளோம்.

ரோக்கியோ மாநாட்டில் கிடைக்கும் நிதி, வடக்கு - கிழக்குப் பகுதிகளிலும் பயன்படுத்தப்படும். விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க விரும்புகிறோம். இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டுமென்று, நாம் நோர்வே அரசிற்கும் அறிவித்திருக்கிறோம்.

இலங்கையில் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் உதவிபுரிய முன்வரவேண்டும், என்று ரோக்கியோ மாநாட்டில் பகிரங்க வேண்டுகோளொன்றை சர்வதேச சமூகத்திடம் விடுக்கவிருக்கிறேன் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.